2023 பாஸ்கா காலச் சிந்தனைகள் கையேடு | முதல் ஆண்டு

# வார்த்தை

# உலகின் வாழ்வு

என் காலடிக்கு உம் வாக்கே விளக்கு!
என் பாதைக்கு ஒளியும் அதுவே!
திருப்பாடல் 119:105



# பொருளடக்கம்

3 பாஸ்கா காலச் செய்தி 2023
4 இந்தக் கையேட்டின் நோக்கம்
4 இந்தக் கையேட்டைப் பயன்படுத்தும் முறை
6 குழு அமர்வின் வடிவம்
8 பாஸ்கா காலத்தின் ஞாயிறுகள் (முதல் ஆண்டு)
9 உயிர்ப்பு ஞாயிறு
15 பாஸ்கா காலத்தின் இரண்டாம் ஞாயிறு
21 பாஸ்கா காலத்தின் மூன்றாம் ஞாயிறு
27 பாஸ்கா காலத்தின் நான்காம் ஞாயிறு
33 பாஸ்கா காலத்தின் ஐந்தாம் ஞாயிறு
40 பாஸ்கா காலத்தின் ஆறாம் ஞாயிறு
47 பாஸ்கா காலத்தின் ஏழாம் ஞாயிறு
54 தூய ஆவியார் ஞாயிறு
62 பிற்சேர்க்கை ~ நடவடிக்கைகள்
65 நன்றியறிவிப்புகள்

# பாஸ்கா காலச் செய்தி 2023

கிறிஸ்துவில் பிரியமான சகோதரர் சகோதரிகளே,

உங்கள் அனைவருக்கும் ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்புப் பெருவிழா வாழ்த்துக்கள்! அல்லேலூயா! ஆண்டவர் உண்மையிலேயே உயிர்த்தெழுந்தார்! அல்லேலூயா!

வார்த்தைகள், வார்த்தைகள், வார்த்தைகள். அவையின்றி நாம் வாழ முடியாது. இருப்பினும், நாம் அதிக வேகத்தில் நம் வாழ்வை நகர்த்தும் போது, நாம் பயன்படுத்தும் வார்த்தைகளைக் குறைக்க முயற்சிக்கிறோம். SMS என்பதன் பொருள் நம் அனைவருக்கும் தெரியும் என நான் நம்புகிறேன். எவ்வளவு சுருக்கமோ அவ்வளவு சிறந்தது என முன்பு நாம் அனைவரும் நினைத்திருந்தோம். செய்திகளைச் சுருக்கியதால், பயன்படுத்தப்பட்ட வார்த்தையின் உண்மையான பொருளை இழக்க அது வழிவகுத்ததுள்ளது. நாமும் உண்மையான பொருளை அறியாமல் அந்த வார்த்தைகளை அதன் சூழலுக்கு அப்பால் பயன்படுத்துகிறோம்.

இறைவார்த்தையோ உயிரளிக்கிறது. அந்த வார்த்தை வழியாக நம் வாழ்வு புதுப்பிக்கப்படுகிறது, புதுவாழ்வும் உருவாக்கப்படுகிறது. இறைவார்த்தை நம்மில் உயிரோடு செயலாற்றுகிறது. நாம் உயிர்ப்புப் பெருவிழாவைக் கொண்டாடும் போது, தன் வார்த்தைக்கு உண்மையாக இருக்கும் தந்தையைக் கொண்டாடுகிறோம். வார்த்தையான இயேசு, நம் நடுவில் வந்து, நம் வாழ்வோடு வாழ்ந்து, நமக்கு மீட்பளித்தார். இந்த வார்த்தையைப் பகிரவும், அவர் முன்னிலையில் வாழவும் நாம் அனைவரும் ஒன்றிப்போம். நீங்கள் ஒருவரோடொருவர் பகிரும் போதும், உயிர்ப்பின் மகிழ்ச்சியால் நிரப்பப்படும் போதும் இறைவார்த்தை உங்களுக்குத் திகைப்பைத் தருவதாக.

நீங்கள் மற்றவர்களுடன் பகிரும் போதுதான் உயிர்ப்பின் மகிழ்ச்சி உங்களுக்குள் வளரும். உயிர்ப்பின் அமைதியையும் மகிழ்ச்சியையும் அன்பையும் இறைவன் உங்களுக்கு வழங்குவாராக.

**அருள்தந்தை டெரென்ஸ் பெரெய்ரா**
*புதிய நற்செய்தி முழக்கத்திற்கான முதன்மை குரு*

# இந்தக் கையேட்டின் நோக்கம்

இந்தக் கையேடு குடும்பங்களுக்காகவும், பெரியோர் மறைகல்விக் குழுக்களுக்காக வும், பங்குக் குழுமங்களுக்காகவும், அன்பியச் சமூகங்களுக்காகவும் உத்தேசிக்கப்பட்டது. இதைத் தனி மனிதச் சிந்தனைகளுக்கும் பயன்படுத்தலாம்.

- நாம் வாழும் கிறிஸ்தவ சமூகத்தை, இறைவனுடைய வார்த்தையைக் கேட்டு அதை நம் வாழ்வில் கடைப்பிடிக்க ஊக்குவிக்கும் இடமாக மாற்றவும்,
- இதில் பங்கேற்போர், அண்டை வீட்டாருக்கும் தேவையுள்ளோருக்கும் உதவும் தங்களின் குறிக்கோளை அடையவும், சமூக அனுபவத்தைப் பெற்றுக் கொள்ளவும்,
- பங்கிலுள்ள அமைப்புகளும் குழுக்களும் கிறிஸ்துவை மட்டுமே மையமாகக் கொண்டு, ஒன்று கூடி செபிக்கவும்,
- இதில் உள்ளச் சிந்தனைகள், செய்திகள், செயல்பாடுகள், நடவடிக்கைகள் மூலம் ஒருவரோடு ஒருவர் விசுவாசத்தைப் பகிர்ந்து, ஒப்புரவாக்கப்பட்டு, அன்பை மட்டுமே தகவல் பரிமாற்றத்தின் முக்கியச் செய்தியாக்கிக் குடும்பத்தினரிடையே உள்ள தொடர்பை அதிகரிக்கவும் இந்தக் கையேடு தயாரிக்கப்பட்டுள்ளது.

# இந்தக் கையேட்டைப் பயன்படுத்தும் முறை

திருப்பலியில் இறைவார்த்தையைப் பெறுவதற்கான முன்தயாரிப்பாக ஞாயிறு திருப்பலிக்கு முன்னரோ, அல்லது திருப்பலியில் நாம் கேட்ட இறைவார்த்தைகளை நம் வாழ்க்கையில் பின்பற்றும் வகையில் ஞாயிறு திருப்பலிக்குப் பின்னரோ இதைப் பயன்படுத்தலாம்.

குழு அமர்வின் போது இறைவார்த்தையைப் படிக்கவும், அமர்வை வழிநடத்தவும், கையாளவும் அமர்வின் உறுப்பினர்கள் தாராளமாக முன்வரலாம்.

ஒவ்வொரு அமர்வையும் சிறப்புடன் வழிநடத்த வெவ்வேறு உறுப்பினர்கள் பொறுப்பு ஏற்கலாம். வேறொருவர் அமர்வில் நடைபெறும் செயல்களைக் குறிப்பெடுத்து, வர இயலாதவர்களுக்கு அனுப்பி வைக்கலாம்.

ஒவ்வொரு அமர்வும் சுமார் இரண்டு மணி நேரத்திற்கு மேல் போகாமல் பார்த்துக் கொள்ளவும். அடுத்த அமர்விற்கான இடமும் நேரமும் இந்த அமர்வில் அறிவிக்கப்பட வேண்டும்.

# குழு அமர்வின் வடிவம்

### தொடக்கச் செபம்

எல்லோரும் ஒன்று சேர்ந்து தொடக்கச் செபத்தைச் சொல்லி, தொடக்கப் பாடலைப் பாடலாம். தியான உணர்வையும், இறைவார்த்தையைச் செவிமடுக்கத் தூண்டும் பாடல்களைப் பயன்படுத்தவும்.

### இறைவார்த்தை

கொடுக்கப்பட்டுள்ள மூன்று இறைவார்த்தைப் பகுதிகளை இரு முறையாவது வாசித்து, சில மணித்துளிகள் மௌனமாக தியானிக்கவும். பின்னர், இந்தக் கையேட்டில் உள்ளவற்றைப் பயன்படுத்தி அமர்வின் முதல்வர் அப்பகுதிகளுக்கு விளக்கம் தர வேண்டும். அமர்வின் முதல்வர் முன்னதாகவே தகுந்த தயாரிப்புடன் இருத்தல் அவசியம்.

### தியானிப்போம்

இந்த வார இறைவார்த்தைப் பகுதிகளைச் சரியாகப் புரிந்து கொள்ள, நமது சிந்தனையை ஆழப்படுத்த உதவும் இப்பகுதியை ஒருவர் வாசித்தப் பின்னர் சிறிது நேரம் தியானிக்கவும்.

### சிந்திப்போம்

வெவ்வேறு குழுக்களை நினைவில் கொண்டு இந்தப் பகுதி வடிவமைக்கப்பட்டுள்ளது. உங்களுக்கு உகந்தப் பகுதியை எடுத்து வாசித்து, சிந்தித்துக் கருத்தளிக்கவும். பலரும் கருத்தளிக்க நேரம் ஒதுக்கவும். ஒரே நபர் பேசுவதைத் தவிர்க்கவும்.

### நம் வாழ்விற்காக

இறைவார்த்தையின் அழைப்பை ஏற்றுக் குழுவாகவோ தனி நபராகவோ ஒரு திடமான செயலில் ஈடுபட உங்களுக்கான இவ்வாய்ப்பைப் பயன்படுத்துங்கள்.

### நற்செயல் புரிவோம்

நம்பிக்கையில் தளர்வுறும் கத்தோலிக்கர்களுக்கும், புதிதாகத் திருமுழுக்கு பெற்றவர்களுக்கும் திருமுழுக்கு பெறாதவர்களுக்கும் இயேசுவின் நற்செய்தியையும், நம் நம்பிக்கையையும் பரப்பும் முயற்சிகளைச் சிறப்புடன் மேற்கொள்ளலாம்.

### நிறைவு செபம்

எல்லோரும் இணைந்து, நிறைவு செபத்தைச் சொல்லி இவ்வமர்வை நிறைவு செய்யவும். நம் சமூகத்துக்காகவும், பங்கேற்போருக்காகவும், அவர்களது குடும்பத்திற்காகவும் சிறப்பாகச் செபிக்கவும்.

### பிற்சேர்க்கை நடவடிக்கைகள்

நம் ஆன்மீகப் பயணத்தை நம் கிறிஸ்துவ சகோதரர் சகோதரிகளுடன் மேம்படுத்தச் செயல்பாடுகளும், நடவடிக்கைகளும் பிற்சேர்க்கைப் பகுதியில் உள்ளது.

# குழுச் சிந்தனைகளை மேம்படுத்துதல்

*'இரண்டு, மூன்று பேர் என் பெயரால் எங்கே கூடியிருப்பார்களோ அங்கே அவர்கள் நடுவே நான் இருக்கிறேன்.'* (மத்தேயு 18:20)

கிறிஸ்துவின் பிரசன்னத்தைக் குறித்து கவனமாய் இருங்கள். குழுவினிடையே பேசும் போதும், செயல்படும் போதும் பணிவுடனும் மரியாதையுடனும் இருங்கள். உரையை தியானத்துடன் வாசியுங்கள். நற்செய்தி வாசகங்களுக்கு உங்களது சிறந்த கவனத்தைக் கொடுங்கள்.

---

*'எல்லோரும் ஒன்றாய் இருப்பார்களாக. தந்தாய், நீர் என்னுள்ளும் நான் உம்முள்ளும் இருப்பது போல், அவர்களும் நம்முள் ஒன்றாய் இருக்கும்படி மன்றாடுகிறேன்.'* (யோவான் 17:21)

அனைவரையும் உபசரியுங்கள். புதிய வருகையாளர்களுக்குச் சிறப்புக் கவனம் செலுத்துங்கள். ஒவ்வொருவரையும் சமூகத்தின் அன்பிற்குரிய அங்கங்களாக நடத்துங்கள். அமர்வில் அனைவரும் பங்கேற்கும்படி ஊக்குவியுங்கள். அனைவருக்கும் புரியும்படியான சொற்களைப் பயன்படுத்துங்கள்.

---

*'அவர்களுள் பெரியோர் அவர்கள் மீது அதிகாரம் செலுத்துகின்றனர். உங்களிடையே அப்படி இருக்கக் கூடாது.'* (மாற்கு 10:42-43)

எப்போதும் யாரிடமும் அதிகாரத் தோரணையுடனும், அகந்தையுடனும், பிறருக்கு அறிவுரை கூறும் வகையிலும், யாவற்றையும் அறிந்த மாதிரி அல்லது என்ன செய்ய வேண்டுமென்று பிறருக்கு எடுத்துக்கூறும் வகையிலும், நடந்து கொள்ளக்கூடாது.

---

*'என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தன் சிலுவையை நாள்தோறும் தூக்கிக் கொண்டு என்னைப் பின்பற்றட்டும்.'* (லூக்கா 9:23)

இந்தச் சிந்தனைகளுக்கு மிகவும் அடிப்படையானது இறைவார்த்தை, திருச்சபையின் போதனைகள் மற்றும் கிறிஸ்துவின்பால் நம்மை மனமாறச் செய்யும் அழைப்பு. இந்த அமர்வில், உங்கள் பகிர்வு வேறு கருத்து நோக்கித் திசைமாறிச் சென்றால், அன்றைய கருத்துக்கு ஆதரவு தரும்படி அழைக்கவும்.

---

*'ஏனெனில் நீங்கள் பேசவேண்டியவற்றைத் தூய ஆவியார் அந்நேரத்தில் உங்களுக்கு கற்றுத்தருவார்.'* (லூக்கா 12:12)

பகிர்ந்து கூற வேண்டியதை முன் கூட்டியே தயாரிக்கவோ, இதற்காக ஒருவரை நியமிக்கவோ தேவையில்லை. இறைவனின் ஆவி இயல்பான கருணை மிகுந்த குணத்துடன் செயல்படுவதற்குக் காத்திருக்கவும். இக்கருத்து தொடர்பாக யாராவது தன்னிச்சையாகத் தங்களுடைய விசுவாச அனுபவத்தைப் பகிர வந்தால், அவருக்கு வாய்ப்பளித்து நன்றி கூறுங்கள்.

---

*'உங்கள் ஒளி மனிதர் முன் ஒளிர்க! அப்போது உங்கள் நற்செயல்களைக் கண்டு உங்கள் விண்ணகத் தந்தையை போற்றி புகழ்வார்கள்.'* (மத்தேயு 5:16)

இச்சிந்தனைகள் இறைவனுடைய விருப்பத்தைச் செயல்படுத்தச் சவால் விடுகின்றன. அதாவது நாம் சந்திக்கும் நபர்களிடம் இயேசுவின் அன்பைப் பற்றிச் சிந்திக்க அழைக்கின்றன. இதற்காக அடுத்த குழு அமர்வில் சிறிது நேரம் செலவழித்து, இதையே சென்ற வாரத்தில் நாம் எவ்வாறு சிந்தித்தோம் என்பதைப் பற்றி ஆராயவும்.

# சிங்கை வானொலி

2023 பாஸ்கா காலச் சிந்தனைகள் கையேட்டின் ஒலி வடிவை வரும்
ஏப்ரல் 6ம் தேதி முதல் ஒவ்வொரு வியாழன் அன்று காலை 8:00 மணிக்கு
ஆங்கிலத்தில் எங்களது படைப்பாளர்கள் வழியாகக் கேட்டுப் பயன் பெறுங்கள்.

மேலும் எங்களது இணைப் பக்கம் (https://radio.catholic.sg) வழியாகவும்,
சிங்கை கத்தோலிக்க வானொலிச் செயலியை பதிவிறக்கம் செய்தும்
கேட்டு மகிழுங்கள்.

Apple App Store

Google Play Store

Huawei App Gallery

சிங்கை கத்தோலிக்க வானொலிச் செயலி வழியாக இதே சிந்தனைகளையும்,
தினசரி நற்செய்திச் சிந்தனைகளையும் தமிழில் கீழுள்ள இணையப் பக்கம்
வழியாக எந்நேரத்திலும் கேட்டுப் பயன் பெறுங்கள்.

https://radio.catholic.sg/tamil-scripture-reflection/

# பாஸ்கா ஞாயிறுகள் (முதல் ஆண்டு)

## வார்த்தை – உலகின் வாழ்வு

| வாரங்கள் | வாசகங்கள் | கருப்பொருள் |
|---|---|---|
| உயிர்ப்பு ஞாயிறு | திருத்தூதர் பணி 10:34, 37-43;<br>கொலோசையர் 3:1-4;<br>யோவான் 20:1-9; | வார்த்தை உயிரோடுள்ளது |
| பாஸ்கா காலத்தின் இரண்டாம் ஞாயிறு | திருத்தூதர் பணி 2:42-47;<br>1 பேதுரு 1:3-9;<br>யோவான் 20:19-31; | வார்த்தை நம்மை ஒன்றிணைக்கிறது |
| பாஸ்கா காலத்தின் மூன்றாம் ஞாயிறு | திருத்தூதர் பணி 2:14,22-33;<br>1 பேதுரு 1:17-21;<br>லூக்கா 24:13-35; | வார்த்தையால் புது வாழ்வு |
| பாஸ்கா காலத்தின் நான்காம் ஞாயிறு | திருத்தூதர் பணி 2:14, 36-41;<br>1 பேதுரு 2:20-25;<br>யோவான் 10:1-10; | வார்த்தைக்குச் செவிகொடுத்தல் |
| பாஸ்கா காலத்தின் ஐந்தாம் ஞாயிறு | திருத்தூதர் பணிகள் 6:1-7;<br>1 பேதுரு 2:4-9;<br>யோவான் 14:1-12; | வார்த்தை நம்மைப் வாழ்வுக்கு அழைத்துச் செல்கிறது |
| பாஸ்கா காலத்தின் ஆறாம் ஞாயிறு | திருத்தூதர் பணி 8:5-8, 14-17;<br>1 பேதுரு 3:15-18;<br>யோவான் 14:15-21; | வார்த்தை அன்பாயிருக்கிறார் |
| பாஸ்கா காலத்தின் ஏழாம் ஞாயிறு | திருத்தூதர் பணி 1:12-14;<br>1 பேதுரு 4:13-16;<br>யோவான் 17:1-11; | நம்மிடையே மாட்சி பெற்ற வார்த்தை |
| தூய ஆவியார் ஞாயிறு | திருத்தூதர் பணி 2:1-11;<br>1 கொரிந்தியர் 12:3-7,12-13;<br>யோவான் 20:19-23; | வார்த்தையால் நிறைவேறிய வாக்குறுதி |

## ஆண்டவரின் உயிர்ப்பு ஞாயிறு

# வார்த்தை உயிரோடிருக்கிறது

### தொடக்கச் செபம்:

*இன்று நமக்குச் சிந்தனை உணர்வூட்டவும், இறைவார்த்தைக்கும் மற்றவருக்கும் திறந்த மனதுடன் செவிசாய்க்கவும், அனைவரும் ஒரு தொடக்கப் பாடலைப் பாடி, கீழுள்ள தொடக்கச் செபத்தை இணைந்து சொல்லவும்.*

விண்ணகத் தந்தையே, உமது அளப்பரிய அன்பினால் உமது திருமகன் இயேசு கிறிஸ்துவை எங்களுக்காக அனுப்பி மரிக்கச் செய்தமைக்காக நாங்கள் உமக்கு நன்றி செலுத்துகிறோம். ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் இந்த இயேசுவை மரித்தோரிலிருந்து உயிர்த்தெழச் செய்தமைக்காகவும் நாங்கள் உமக்கு நன்றி செலுத்துகிறோம். அவரது உயிர்ப்பால் நீர் எங்களுக்கு விண்ணகத்தின் கதவுகளைத் திறந்து நாங்கள் என்றென்றும் உம்மோடு வாழ நீர் வழி செய்துள்ளீர். நாங்கள் உமது வார்த்தையை சிந்திக்கும் இந்த வேளையில், நீர் எங்களுக்காக வைத்திருக்கும் செய்தியை வெளிப்படுத்துகிறீர். உமது வார்த்தை எங்கள் இதயங்களில் என்றும் குடியிருப்பதாக. உமது திருமகனும் எங்கள் உயிர்த்தெழுந்த ஆண்டவருமாகிய இயேசு கிறிஸ்து வழியாகவும், உமது அன்பினாலும் எங்கள் வாழ்வு மாற்றமடைய அருள் புரியும். ஆமென்.





# இறைவார்த்தை:

***மூன்று வாசகங்களையும் அதன் விளக்கங்களையும் சத்தமாக வாசித்தப் பின், அமைதியான சிந்தனைக்கு சிறிது நேரம் ஒதுக்கவும். குழுவின் முதல்வர் கொடுக்கப்பட்டுள்ள விளக்கங்களைப் பயன்படுத்தி வாசகங்களைத் தெளிவுபடுத்துவார். அமர்வுக்கு முன் குழுவின் முதல்வர் தகுந்தத் தயாரிப்புடன் இருக்கப் பரிந்துரைக்கப்படுகிறது.***

## முதல் வாசகம்: திருத்தூதர் பணிகள் 10 : 34, 37 – 43

இஸ்ரயேலரையும் யூதரையும் மட்டுமின்றி அனைவரையும் தம் குடும்பத்தில் சேர்க்க வேண்டும் என்ற நமது விண்ணகத் தந்தையின் விருப்பத்தையே இந்த வாசகம் வெளிப்படுத்துகிறது. இத்தாலியரும் பிற இனத்தாருமான (யூதரல்லாத) கொர்னேலியுவுடன் உயிர்த்த கிறிஸ்துவைப் பற்றிப் பகிர பேதுருவைக் கடவுள் அனுப்பியதாக வாசிக்கிறோம். பழைய உடன்படிக்கை இஸ்ரயேலருக்கு மட்டுமே பொருந்தும். ஆனால் கிறிஸ்துவால் நிறுவப்பட்டப் புதிய உடன்படிக்கை எல்லாருக்கும் உரியது. கடவுளின் தூதர் கொர்னேலியவைச் சந்தித்த போது, அவர் அவருடன் நற்செய்தியைப் பகிரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மாறாக, உங்களையும் என்னையும் போன்ற ஒரு மனிதரான பேதுருவைக் கடவுள் நற்செய்தியைப் பகிரப் பணித்தார்.

## இரண்டாம் வாசகம்: கொலோசையர் 3 : 1 – 4

இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்த போது, அவரது உடல் முன்னிருந்தது போல் இல்லை. மாறாக, அது மாட்சி பெற்றதாக இருந்தது. நமது திருமுழுக்கினால் நாம் கிறிஸ்துவின் இறப்பையும் உயிர்ப்பையும் பிரதிபலிக்கிறோம். அதே போல், கிறிஸ்துவில் நமது புது வாழ்வு நமது முந்தைய வாழ்விலிருந்து வேறுபட்டதாக இருக்க வேண்டும். நமது வாழ்வு கிறிஸ்துவோடு இறைவனுக்குள் மறைந்திருக்கிறது எனத் தூய பவுல் எழுதுகிறார். நம்பிக்கையினால் நமது எண்ணங்கள் விண்ணைச் சார்ந்தவற்றில் நிலைத்திருந்து, நமது அன்றாட வாழ்வினால் இந்தத் தெய்வீகக் குணங்களைக் கிறிஸ்துவின் சீடராக நாம் வாழ்ந்து வெளிப்படுத்த வேண்டும்.

## நற்செய்தி வாசகம்: யோவான் 20 : 1 – 9

இதுவே நற்செய்தியின் சாராம்சம். இதுவே மனித வரலாற்றில் முக்கியத் தருணம். இயேசுவே உண்மையான மெசியா என இந்த உயிர்ப்பு நமக்கு வெளிப்படுத்துகிறது. இந்த உயிர்ப்பு நற்செய்தியைப் பகிர இயேசுவின் சீடர்களை உற்சாகப்படுத்தியது. இந்த உயிர்ப்பு நம் வாழ்வுக்கு ஒரு அர்த்தத்தையும் நோக்கத்தையும் கொண்டு வந்தது. இயேசு கொண்டு வந்த மீட்பளிக்கும் நற்செய்தியை நாம் பிறருடன் பகிர்ந்து கொள்வதும், நாசரேத்து இயேசுவின் கதையை அவர்களுக்கு எடுத்துச் சொல்வதும் இனி நமது பொறுப்பு.

## தியானிப்போம்:

*இந்த வார வாசகங்களின் சிந்தனையை ஆழப்படுத்த உதவும் இப்பகுதியை ஒருவர் சத்தமாக வாசிக்கவும். சிந்தித்துப் பதிலளிக்கத் தகுந்த நேரத்தை அனுமதிக்கவும்.*

நாம் பிறப்பிலிருந்தே கத்தோலிக்கராக இருந்தாலும் சரி, வயது வந்தவராக இருந்தாலும் சரி, நம் வாழ்வின் ஒரு கட்டத்தில் நமக்கு யாரோ ஒருவர் நற்செய்தியைப் பகிர்ந்துள்ளார். அது ஒரு பக்தியுள்ள நண்பராக இருக்கலாம் அல்லது ஒரு யூடியூப் வீடியோவை வெளியிட்டவராகவும் இருக்கலாம். இந்த நபர் இயேசுவைப் பற்றிய நமது ஆர்வத்தைத் தூண்டி, அவரைப் பற்றி மேலும் அறியச் செய்துள்ளார்.

அதன் பின் நடந்தவை காதலில் விழுந்த நம் வாழ்வு போல் மாறி இருக்கலாம். கிறிஸ்துவின் சிலுவை சாவு வழியாக அவர் செய்த தியாகத்தால் நம் மீது அவர் கொண்ட அன்பின் மகத்தானத் தன்மையை நாம் புரிந்துகொண்டோம். ‘தம் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதை விட சிறந்த அன்பு யாரிடமும் இல்லை’ என இயேசுவே நமக்குக் கூறுகிறார் (யோவான் 15:13). உண்மை அன்பு பகிர்வதையே விரும்பும். அருள் அடையாளங்கள் வழியாக இயேசு நம்மை அவருடைய அன்பிற்குள் ஈர்த்து, அவற்றால் நம் வாழ்வை மாற்றுகிறார்.

நமது திருமுழுக்கினால் நாம் உன்னதக் கடவுளின் பிள்ளைகளாக மாறி, தூய ஆவியாரால் நிரப்பப்படுகிறோம். பாவச் சங்கிலிகளிலிருந்து விடுதலை பெற்று, விண்ணகத்தில் கடவுளோடு நிலைவாழ்வின் அருளைப் பெற்றுள்ளோம். எனவே, இவ்வுலகு சார்ந்தவை பற்றி அல்ல, மேலுலகு சார்ந்தவை பற்றியே எண்ண தூய பவுல் வலியுறுத்துகிறார் (கொலோ 3:2). நாம் இவ்வுலகிலிருந்து வேறுபட்டுத் தூயோராக வாழ அழைக்கப்பட்டுள்ளோம். நமது சொல்லாலும் செயலாலும் எண்ணங்களாலும் நாம் இதைப் பிரதிபலிக்க வேண்டும்.

நாம் இவ்வுலகில் வாழும் போது, இவ்வுலகு சார்ந்தவை பற்றியும், அவற்றால் நம் விண்ணகத் தந்தை மாற்சியுறும்படி அவற்றை எவ்வாறு மாற்றுவது என்பது பற்றியும் நாம் அக்கறையுடன் இருக்க வேண்டும். எனவே, நாம் கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி இவ்வுலகில் வாழ அழைக்கப்படுகிறோம். நம் தந்தை எவ்வாறு நம்மை அவரோடு ஒத்துழைத்து பிறருக்கு நற்செய்தியைப் பகிர அழைத்தாரோ அது போல நம் வழியாக பிறரும் நம் தந்தையாகிய இறைவனை அறிந்து கொள்வார்கள். ‘உலகின் கடையெல்லை வரைக்கும் நீங்கள் எனக்குச் சாட்சிகளாய் இருங்கள்’ (திரு. பணி 1:8) என்று அவருடையத் திருத்தூதர்களுக்கு அவர் கொடுத்த இறுதிக் கட்டளை நமக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. இந்த உயிர்ப்பு விழாவில் இந்தக் கட்டளைக்கு நாம் செவிசாய்ப்போம். இவ்வுலகிற்கு நற்செய்தியைப் பகிர நம்மை அவருடைய கருவியாகப் பயன்படுத்தும்படி இறைவனிடம் மன்றாடுவோம்.

# சிந்திப்போம்:

## பகிர்வுக்கானக் கேள்விகள்

*இப்பகுதி தனிநபர் மற்றும் குழுக்கள் பகிர்வுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதன் பிற்பகுதி அன்பியங்கள், ஆலயப் பணிக்குழுக்கள், குடும்பங்கள் என்றக் குறிப்பிட்டச் சூழலுக்கேற்பக் குழுப் பகிர்வுகளைத் தூண்ட உதவும். அனைவரும் இக்கேள்விகளைச் சிந்தித்துப் பதிலளிக்கத் தகுந்த நேரத்தை அனுமதிக்கவும்.*

## தனிநபர் சிந்தனை & பகிர்வுக்கானக் கேள்விகள்

*கீழுள்ளவற்றைச் சிந்திக்க நேரம் ஒதுக்கவும். நீங்கள் குழுவில் இருந்தால் பகிரவும்.*
*உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதி எது?*
*உங்கள் உள்ளத்தைத் தூண்டியது எது? அதை சற்று சிந்தியுங்கள்.*

- உயிர்ப்பின் காரணத்தையும், இந்த நம்பிக்கையினால் உங்கள் வாழ்வை நீங்கள் எவ்வாறு வாழ்ந்தீர்கள் என்பதையும் சிந்திக்க எப்போதாவது நேரம் ஒதுக்கியுள்ளீர்களா?
- உயிர்ப்பு பற்றிய நற்செய்தியை நீங்கள் எப்போதாவது அவிசுவாசிகளோடு பகிர்ந்துள்ளீர்களா?

## குழுச் சூழலுக்கு ஏற்றப் பகிர்வுக்கானக் கேள்விகள்

*உங்கள் சூழலுக்கு ஏற்ப பின்வரும் கேள்விகளில் ஒன்றை நீங்கள் சிந்திக்க விரும்பலாம்.*

### அன்பியங்கள்:

*உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிப் பகிருங்கள்.*
*நீங்கள் வாசிக்கக் கேட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிப் பகிருங்கள்.*

- ஆண்டவரின் உயிர்ப்பை நீங்கள் எவ்வாறு சமூகத்துடன் பகிர்ந்துள்ளீர்கள்?
- உலகிற்கு நற்செய்தியைப் பகிரத் திருத்தூதர்கள் அனுப்பப்பட்டனர். ஒரு சமூகமாக நாம் எவ்வாறு கிறிஸ்துவை பிறருக்குக் கொண்டு செல்ல முடியும்?

### ஆலயப் பணிக்குழுக்கள்:

*உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிப் பகிருங்கள்.*
*நீங்கள் வாசிக்கக் கேட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிப் பகிருங்கள்.*

- ஆண்டவரின் உயிர்ப்பைப் பற்றி உங்கள் பணிக்குழுவினரோடு என்னென்ன வழிகளில் அடிக்கடி பேசியிருக்கிறீர்கள்? இது உயிர்ப்புப் பெருவிழா வேளையில் மட்டுமா?
- ஒரு பணிக்குழுவாக நீங்கள் உங்கள் பொறுப்புகளை நிறைவேற்றும்போது, நீங்கள் செய்யும் பணியில் ஆண்டவரின் உயிர்ப்பு இருப்பதை எவ்வாறு காட்ட முடியும்?

**குடும்பங்கள்:**

*உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியை குடும்பத்தாருடன் பகிருங்கள். நீங்கள் வாசிக்கக் கேட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிப் பகிருங்கள்.*

- நீங்கள் உயிர்ப்பின் குடும்பம் என உங்களால் சொல்ல முடியுமா?
- உயிர்த்த ஆண்டவரின் உயிரோட்டமான எதிர்நோக்குடனும் அன்புடனும் உங்கள் குடும்பம் ஆண்டு முழுவதும் வாழ்கிறதா?

## நம் வாழ்விற்காக:

*உறுதியான செயல்களால் பதிலளிக்க இறைவார்த்தை எவ்வாறு நம்மைக் குழுவாகவோ அல்லது தனித்தனியாகவோ அழைக்கிறது என்பதைக் கண்டறியவும்.*

நான் நற்செய்தியைக்குச் செவிகொடுக்க ஆசீர் பெற்றவன்.
இப்போது பிறரை ஆசீர்வதிப்பது என் முறை.

## நற்செயல் புரிவோம்:

*வேறு ஒரு நபருக்கு இயேசுவின் நற்செய்தியைப் பகிரவும் அறிவிக்கவும் நீங்கள் செய்ய வேண்டிய செயல்.*

இப்பாஸ்கா காலத்தில், நற்செய்தியைப் பெற வேண்டிய ஒருவரை உங்களிடம் அனுப்பும்படி இறைவனிடம் மன்றாடுங்கள். அவருடன் நற்செய்தியைப் பகிரத் துணிவையும் அருளையும் பெற மன்றாடுங்கள். பின்னர் நற்செய்தியை வாசித்து, உங்களைக் கவர்ந்த மூன்று வசனங்களை ஒரு தாளில் எழுதிக் கொள்ளுங்கள்.

## நிறைவு செபம்:

*நிறைவு செபத்தை அனைவரும் இணைந்து சொல்லி இந்த அமர்வை முடிக்கவும். பங்கேற்ற அனைவருக்காகவும் சமூகத்திற்காகவும் செபியுங்கள்.*

அன்புத் தந்தையே, இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்புக்காகவும், உமது நற்செய்தியின் கொடைக்காகவும் நாங்கள் உமக்கு நன்றி கூறுகிறோம். உமது அன்பாலும், அருளாலும் நீர் எங்களை மாற்றியுள்ளீர். என்றும் நாங்கள் உமது முன்னிலையில் வாழ அருள் தாரும். எங்களோடு உமது நற்செய்தியைப் பகிர நீர் அனுப்பியவர்களுக்காகவும், பயத்தை முன்னிறுத்தி உம்மோடு எங்களை நெருங்க செய்ய அதிகாரம் அளித்த நம்பிக்கையின் கொடைக்காகவும் நாங்கள் உமக்கு நன்றி செலுத்துகிறோம். இன்றும் என்றும், எங்களின் திருப்பயணத்தில் நாங்கள் சந்திக்கும் அனைவருக்கும் உயிர்த்த ஆண்டவரின் அமைதியையும் மகிழ்ச்சியையும் பகிரும் கருவிகளாக நாங்கள் இருக்க வரமருள வேண்டுமென்று எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம். ஆமென்.

# என் பாஸ்கா காலச் சிந்தனைக் குறிப்புகள்

*இந்தப் பாஸ்கா காலத்தில்
நற்செய்தியைக் கேட்க
வேண்டிய ஒருவரை
உங்களிடம் அனுப்பும்படி
இறைவனை மன்றாடுங்கள்.
அவரோடு நற்செய்தியைத்
துணிவோடும் அருளோடும்
பகிரவும் மன்றாடுங்கள்.
பின் நற்செய்தியை வாசித்து,
உங்களைக் கவர்ந்த மூன்று
வசனங்களை எழுதுங்கள்.*

## பாஸ்கா காலத்தின் இரண்டாம் ஞாயிறு

# வார்த்தை நம்மை ஒன்றிணைக்கிறது

### தொடக்கச் செபம்:

*இன்று நமக்குச் சிந்தனை உணர்வூட்டவும், இறைவார்த்தைக்கும் மற்றவருக்கும் திறந்த மனதுடன் செவிசாய்க்கவும், அனைவரும் ஒரு தொடக்கப் பாடலைப் பாடி, கீழுள்ள தொடக்கச் செபத்தை இணைந்து சொல்லவும்.*

விண்ணகத் தந்தையே, நிபந்தனையற்ற உமது அன்புக்காகவும், எங்கள் வாழ்வில் நீர் நிலைத்திருப்பதற்காகவும் நாங்கள் உம்மைப் போற்றிப் புகழ்ந்து உமக்கு நன்றி செலுத்துகிறோம். எங்கள் வாழ்வின் கவனச் சிதறல்கள் வழியாக நாங்கள் மேற்கொள்ளும் புனிதப் பயணத்திற்கு உமது உயிரளிக்கும் வார்த்தையே எங்களுக்கு அறிவூட்டுகிறது. உமது வார்த்தை மட்டுமே எங்களை ஒரே மக்களாக ஒன்றிணைத்து, நாங்கள் உம்மை ஒரே மக்களாக மாட்சிப்படுத்தி, உமது அன்பிற்கு சாட்சியமளிக்க விரும்புகிறோம். உம்மோடு தூய ஆவியாரின் ஒன்றிப்பில் இறைவனாய் என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்கின்ற எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம். ஆமென்.



## இறைவார்த்தை:

***மூன்று வாசகங்களையும் அதன் விளக்கங்களையும் சத்தமாக வாசித்தப் பின், அமைதியான சிந்தனைக்கு சிறிது நேரம் ஒதுக்கவும். குழுவின் முதல்வர் கொடுக்கப்பட்டுள்ள விளக்கங்களைப் பயன்படுத்தி வாசகங்களைத் தெளிவுபடுத்துவார். அமர்வுக்கு முன் குழுவின் முதல்வர் தகுந்தத் தயாரிப்புடன் இருக்கப் பரிந்துரைக்கப்படுகிறது.***

### முதல் வாசகம்: திருத்தூதர் பணிகள் 2 : 42 – 47

பெந்தகொஸ்தே நாளில் கடவுளின் புதுப்பிக்கப்பட்ட மக்களின் எழுச்சியூட்டும் தொடக்கத்தைப் பற்றி லூக்கா எழுதுகிறார். முதல் கிறிஸ்தவ சமூகத்தின் வாழ்விலுள்ள நான்கு முக்கிய கூறுகளை அவர் நமக்கு முன்மாதிரியாக முன்னிலைப்படுத்துகிறார்: திருத்தூதர்களின் கற்பித்தல், பரஸ்பர வாழ்வுப் பகிர்வு, நற்கருணை மற்றும் ஒன்றித்த மன்றாட்டு. திருத்தூதர்களின் கற்பித்தலில் இயேசுவின் வார்த்தைகளும் செயல்களும் இருந்தன. அவை அவர்களின் வாழ்வு முறையை வழிநடத்தியது. தூய ஆவியாருக்கு மனமுவந்து, கிறிஸ்துவின் மேலுள்ள நம்பிக்கையால் மாற்றம் பெற்று, ‘எல்லா உடைமைகளையும் பொதுவாய் வைத்திருக்க’ அது வழிவகுத்தது. உறுப்பினர்களுக்குத் தனிப்பட்ட சொத்து இல்லை என்பதல்ல, மாறாக, அதிக நிதித்திறன் கொண்டவர்கள் தங்கள் சொத்தில் ஒரு பகுதியை அப்புறப்படுத்தி, அவர்களது வருமானத்தை தேவைப்படுவோருடன் பகிர்ந்து கொண்டனர்.

### இரண்டாம் வாசகம்: 1 பேதுரு 1 : 3 – 9

தங்களது அன்றாட வாழ்வில் உண்மையானப் பிரச்சனைகளை எதிர்கொள்வதால் மனம் மாறியவர்களின் புதிய நம்பிக்கை சோதனைக்குள்ளாகியது. அவர்களுக்கு இந்த மேய்ப்புக் கடிதம் ஊக்கமளிக்கிறது. அன்றாட வாழ்வின் காரணமாகவும், நங்கூரமாகவும், நம் தந்தையாகிய இறைவனோடு நெருங்கியத் தொடர்பிலிருக்கும் இயேசுவை ஆசிரியர் சுட்டிக்காட்டுகிறார். துன்ப வேளையிலும் நாம் கிறிஸ்துவைப் பின்பற்றி முன்னேறும்போது நம் தந்தை நம்மைப் பாதுகாக்கிறார். இக்கடிதத்தின் முக்கிய கருப்பொருள் பின்வருமாறு: (1) நம் தந்தையாகிய இறைவன் நமக்கு ஒரு புதுப்பிறப்பை அளித்தார், (2) அது நம்பிக்கைக்கு வழிவகுத்தது, (3) இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பின் அடிப்படையில் நிறுவப்பட்டது, (4) அது நிலையான விண்ணக உரிமையை கிறிஸ்தவர்களாகிய நமக்குப் பெற்றுத் தந்துள்ளது. இக்கடிதம் நமக்கு துன்பத்தை உணர்த்தி, விடாமுயற்சியையும் எதிர்நோக்கின் உணர்வையும் தூண்டியுள்ளது (வச 6-9).

### நற்செய்தி வாசகம்: யோவான் 20 : 19 – 31

சிலுவையில் அறையப்பட்டு மரித்து உயிர்த்த இயேசு தன் உடலை காண்பித்த போது சீடர்கள் மகிழ்ச்சியில் ஆழ்ந்தனர். அவர்கள் அவரது உயிர் பெற்ற உடலின் யதார்த்தத்தை அனுபவித்து (வச 20) ‘அமைதி’ வாழ்த்தைப் பெற்றார்கள். உலகில் இயேசு கிறிஸ்துவின் முக்கியமானப் பிரசன்னத்தைத் தொடர, தந்தை அவரை அனுப்பியதைப் போலவே, அவர்களும் (நாமும்) அவரால் பணிக்கப்பட்டவர்கள். தனது உயிர்ப்பு வழியாக ஒப்புரவு அருள் அடையாளத்திற்கு இயேசு அடித்தளமிட்டார் (வச 22-23). சந்தேகத் தோமா (வச 24) நம்பிக்கைக் குறைவிலிருந்து இயேசுவின் உடலை அனுபவித்துப் புது விசுவாசம் பெற்று (வச 28) ஒரு

அற்புதப் பயணத்தை மேற்கொண்டார். அவருடைய அன்பான சீடர்களைப் போலவே நாமும் இயேசுவைக் காணாமலேயே விசுவாசிக்க வேண்டும் (வச 8-9).

## தியானிப்போம்:

*இந்த வார வாசகங்களின் சிந்தனையை ஆழப்படுத்த உதவும் இப்பகுதியை ஒருவர் சத்தமாக வாசிக்கவும். சிந்தித்துப் பதிலளிக்கத் தகுந்த நேரத்தை அனுமதிக்கவும்.*

மகிழ்ச்சியான, நம்பிக்கை நிறைந்த, பிறரை மையமாகக் கொண்ட உயிர்ப்பு வாழ்வை வாழ முதல் கிறிஸ்தவ சமூகத்தின் சாட்சி வாழ்வு நமக்கு ஒரு தெளிவானப் பாதையை வழங்குகிறது. மேலுள்ள நான்கு முக்கிய கூறுகளோடு உங்கள் வாழ்வு எவ்வளவு சீராக உள்ளது? சிங்கப்பூர் திறமையானது, முற்போக்கானது, தகுதி வாய்ந்தது, செழிப்பானது என்பதில் பெருமை கொள்கிறது. நாம் அடிக்கடி ஆசியாவில் வறுமையில் வாடும் பலரின் பொறாமைக்கு உள்ளாகிறோம். பெரு முயற்சிகளோடும் தங்கள் வாழ்க்கைத் தரத்தை அவர்களால் கணிசமாக மேம்படுத்த முடியவில்லை. நமது பொருளியல் வாழ்வை மேம்படுத்த நாம் அதிகத் தீவிரமான, பரபரப்பான, மன அழுத்தம் நிறைந்த வேளைப் பளுவுக்கென்று நாம் ஒரு விலை கொடுத்தாலும், இதனால் பலருக்குள் பிளவு உண்டாகிறது.

ஒரு வெறித்தனமான முயல் போல, நாம் அங்கும் இங்கும் குதித்து, செய்வதறியாது, வாழ்வின் அர்த்தத்தை எளிதில் மறந்து விடுகிறோம். ஒரு நடைமுறைக் கண்ணோட்டத்தைக் கொண்டிருப்பதால், நம் வாழ்வுக்கு 'மதிப்பு சேர்க்காதவர்களை' நாம் அடையாளம் காணத் தவறி விடுகிறோம். அவர்களை கண்ணுக்கு தெரியாதவர்களாகவும் முக்கியமற்றவர்களாகவும் மாற்றி விடுகிறோம். நன்கொடைகள் அளிப்பதைத் தவிர்த்து, தேவையுள்ளோருக்கு நமது நேரத்தை பகிரவோ, செவிகொடுக்கவோ, செபிக்கவோ, அவர்களோடு பயணிக்கவோ ஏதாவது முயற்சி எடுக்கிறோமா? இழிவானவரோடும் பாதிக்கப்பட்டவர்களோடும் நமக்கு ஒற்றுமை உணர்வு உள்ளதா? நாம் இறை வார்த்தையோடு நெருக்கமாக இணைந்திருந்தால் மட்டுமே பிறரோடு இந்த ஆன்மீக உணர்வுத் திறனும் ஆழமானத் தொடர்பும் ஏற்படும்.

மற்றவர்களில் துன்புறும் கிறிஸ்துவைக் காண இறை வார்த்தை நம் இதயங்களை எழுப்புகிறது, நாம் எளிதில் புறக்கணிப்போரையும் அறியாதவர்களையும் நம்மோடு பிணைக்கிறது. சமூகம் ஓரங்கட்டுவோருக்கு ஊக்கத்தையும் நம்பிக்கையையும் வழங்க நமக்குத் துணிவைத் தருகிறது. இயேசு தம் வார்த்தை வழியாக நம்மை நெருங்கி, வெளிப்புற இடையூறுகளைப் பொருட் படுத்தாமல் நமக்கு அமைதியை அளிக்கிறார். விண்ணக இலக்கை நோக்கிய நம் பயணத்தில் மற்றவர்களை ஒருபோதும் கைவிடாமல், தொடர்ந்து அன்பு மற்றும் ஒற்றுமையின் விதைகளை நம்பிக்கையோடு விதைக்க நம்மைத் தூண்டுகிறது. கண்ணால் நாம் கிறிஸ்துவைக் காணா விட்டாலும் இறை வார்த்தையின் துணை கொண்டு, நாம் வாழ்வை அனுபவித்து, இயற்கைக்கு அப்பாற்பட்ட ஒளியில் வாழ்ந்து, கிறிஸ்து வழியாக நம் வாழ்வு எவ்வாறு பிரிக்க முடியாத வகையில் ஒருவரோடொருவர் பிணைக்கப்பட்டுள்ளோம் என்பதை உணரச் செய்கிறது.

# சிந்திப்போம்:

## பகிர்வுக்கானக் கேள்விகள்

*இப்பகுதி தனிநபர் மற்றும் குழுக்கள் பகிர்வுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதன் பிற்பகுதி அன்பியங்கள், ஆலயப் பணிக்குழுக்கள், குடும்பங்கள் என்றக் குறிப்பிட்டச் சூழலுக்கேற்பக் குழுப் பகிர்வுகளைத் தூண்ட உதவும். அனைவரும் இக்கேள்விகளைச் சிந்தித்துப் பதிலளிக்கத் தகுந்த நேரத்தை அனுமதிக்கவும்.*

## தனிநபர் சிந்தனை & பகிர்வுக்கானக் கேள்விகள்

*கீழுள்ளவற்றைச் சிந்திக்க நேரம் ஒதுக்கவும். நீங்கள் குழுவில் இருந்தால் பகிரவும்.*
*உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதி எது?*
*உங்கள் உள்ளத்தைத் தூண்டியது எது? அதை சற்று சிந்தியுங்கள்.*

- நீங்கள் துன்பங்களை எதிர்கொள்ளும்போது, சரியான பாதையில் செல்ல இறை வார்த்தை உங்களைத் தூண்டுகிறதா?
- ஏமாற்றங்களும் சோதனைகளும் பிறருடன் நீங்கள் கொண்டுள்ள உங்கள் உறவைத் துண்டிக்கத் தூண்டுகின்றதா? இது போன்ற வேளைகளில் பின்பற்ற இறை வார்த்தை உங்களுக்கு ஒரு உதாரணம் தருகிறதா?

## குழுச் சூழலுக்கு ஏற்றப் பகிர்வுக்கானக் கேள்விகள்

*உங்கள் சூழலுக்கு ஏற்ப பின்வரும் கேள்விகளில் ஒன்றை நீங்கள் சிந்திக்க விரும்பலாம்.*

### அன்பியங்கள்:

*உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிப் பகிருங்கள்.*
*நீங்கள் வாசிக்கக் கேட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிப் பகிருங்கள்.*

- இறை வார்த்தையில் நமது சமூகம் எவ்வளவு வேரூன்றியுள்ளது? இறை வார்த்தை உங்களை நம்பிக்கையின் சமூகமாக உறுதிப்படுத்துகிறதா?
- சமூக உறுப்பினர்களின் பகிர்வுகள் சிங்கப்பூரில் இறை வார்த்தையின் பொருத்தத்தை உங்களுக்குக் காட்டியுள்ளதா?

### ஆலயப் பணிக்குழுக்கள்:

*உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிப் பகிருங்கள்.*
*நீங்கள் வாசிக்கக் கேட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிப் பகிருங்கள்.*

- உங்கள் கூட்டங்களில் பணிக்குழு எவ்வாறு இறை வார்த்தையை நினைவூட்டுகிறது?
- உங்கள் கூட்டங்களில் பணிக்குழுவின் பணிகளும் கோரிக்கைகளும் இறைவார்த்தையின் பகிர்வை ஒதுக்கி வைக்கிறதா?

### குடும்பங்கள்:

*உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியை குடும்பத்தாருடன் பகிருங்கள். நீங்கள் வாசிக்கக் கேட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிப் பகிருங்கள்.*

- உங்கள் குடும்பம் இறை வார்த்தையை வாசித்து, தங்கள் அனுபவத்தைப் பகிர்கிறார்களா?
- இறை வார்த்தை உங்கள் குடும்பத்திற்கு எதிர்நோக்கையும் மகிழ்ச்சியையும் தருகிறதா?

## நம் வாழ்விற்காக:

*உறுதியான செயல்களால் பதிலளிக்க இறைவார்த்தை எவ்வாறு நம்மைக் குழுவாகவோ அல்லது தனித்தனியாகவோ அழைக்கிறது என்பதைக் கண்டறியவும்.*

இறை வார்த்தை நம் மனதுக்கும் இதயத்திற்கும் நெருக்கமாக இருந்தால் மட்டுமே, நம் சொந்த வாழ்விலும், பிறரின் வாழ்விலும் உள்ள சவால்களை நம்மால் உணர முடியும். இயேசுவோடும் பிறரோடும் நமக்கு ஒரு பிரிக்க முடியாத தொடர்புள்ளது.

## நற்செயல் புரிவோம்:

*வேறு ஒரு நபருக்கு இயேசுவின் நற்செய்தியைப் பகிரவும் அறிவிக்கவும் நீங்கள் செய்ய வேண்டிய செயல்.*

நீங்கள் செபிக்கும் அந்த நபருடன் எதைப் பகிர விரும்புகிறீர்கள் என்பதை முதலில் தெளிவுடன் எழுதிக்கொள்ளுங்கள். உங்களைக் கவர்ந்த மூன்று வசனங்களைப் பயன்படுத்தி செபியுங்கள்.

## நிறைவு செபம்:

*நிறைவு செபத்தை அனைவரும் இணைந்து சொல்லி இந்த அமர்வை முடிக்கவும். பங்கேற்ற அனைவருக்காகவும் சமூகத்திற்காகவும் செபியுங்கள்.*

அன்புத் தந்தையே, இந்தப் பொன்னான செப வேளைக்காகவும் பகிர்வுக்காகவும் உமக்கு நன்றி. எங்கள் வாழ்வின் பரபரப்பிலும், ஆன்மீக கவனம் இல்லாததாலும், உமது பிரசன்னத்தை நாங்கள் காணத் தவறிவிடுகிறோம், எதிர் வினையில் மூழ்கிவிடுகிறோம், எங்களைச் சுற்றியுள்ள பிறரிடமிருந்து துண்டிக்கப்படுகிறோம். தந்தையே, உமது வார்த்தை மற்றவர்களில் துன்புறும் கிறிஸ்துவைக் காண எங்கள் இதயங்களை எழுப்பி, வாழ்வில் இது போன்ற நிகழ்வுகளை அனுபவிக்கும் மக்களாக எங்களை பிணைக்கிறது. நீர் இறந்தோரிடமிருந்து எழுப்பிய உமது உயிரளிக்கும் வார்த்தையான இயேசுவே, சமூகத்தால் ஒதுக்கப்பட்டவர்களுக்கு ஊக்கத்தையும் நம்பிக்கையையும் அளிக்கும் தைரியத்தையும், வாழ்க்கையின் சோதனைகளையும் மீறி நாங்கள் ஒன்றாக இருக்க நங்கூரமாக மாறுகிறார். எங்களுக்கு வாழ்வளிக்கும் உமது வார்த்தைக்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம். ஆமென்.

# என் பாஸ்கா காலச் சிந்தனைக் குறிப்புகள்

*நீங்கள் செபிக்கும் அந்த நபருடன் எதைப் பகிர விரும்புகிறீர்கள் என்பதை முதலில் தெளிவுடன் எழுதிக் கொள்ளுங்கள். உங்களைக் கவர்ந்த அந்த மூன்று வசனங்களைப் பயன்படுத்தி செபியுங்கள்.*

## பாஸ்கா காலத்தின் மூன்றாம் ஞாயிறு

# வார்த்தையால் புதுவாழ்வு



### தொடக்கச் செபம்:

*இன்று நமக்குச் சிந்தனை உணர்வூட்டவும், இறைவார்த்தைக்கும் மற்றவருக்கும் திறந்த மனதுடன் செவிசாய்க்கவும், அனைவரும் ஒரு தொடக்கப் பாடலைப் பாடி, கீழுள்ள தொடக்கச் செபத்தை இணைந்து சொல்லவும்.*

எல்லா நன்மைகளின் ஊற்றாகிய எங்கள் தந்தையாகிய இறைவா, எங்கள் வாழ்வின் கொடைக்காக நாங்கள் உமக்கு நன்றி செலுத்துகிறோம். நீர் இல்லாமல் எங்களில் புது வாழ்வில்லை, உமது வார்த்தை உயிரோடு எங்களில் செயலாற்றாமல் எங்களுக்குப் புது வாழ்வில்லை. எங்களைச் சரியான பாதையில், உமக்கு நெருக்கமாக வழிநடத்தி வருவதற்காகவும் உமக்கு நன்றி. உமது திரு மகனின் உயிர்ப்பின் மறைபொருளைச் சிந்திக்க நாங்கள் இங்கு ஒன்று கூடியுள்ளோம். இதனால் எங்கள் மீட்பரும் ஆண்டவருமாகிய இயேசுவைப் போல நாங்களும் மேன்மேலும் வளர உமது அருளைத் தாரும். ஆமென்.

## இறைவார்த்தை:

*மூன்று வாசகங்களையும் அதன் விளக்கங்களையும் சத்தமாக வாசித்தப் பின், அமைதியான சிந்தனைக்கு சிறிது நேரம் ஒதுக்கவும்.*
*குழுவின் முதல்வர் கொடுக்கப்பட்டுள்ள விளக்கங்களைப் பயன்படுத்தி வாசகங்களைத் தெளிவுபடுத்துவார். அமர்வுக்கு முன் குழுவின் முதல்வர் தகுந்தத் தயாரிப்புடன் இருக்கப் பரிந்துரைக்கப்படுகிறது.*

### முதல் வாசகம்: திருத்தூதர் பணிகள் 2 : 14, 22 – 33

திருத்தூதர்கள் ஆற்றிய செயல்கள் பற்றி முழுமையாக மனம் மாறியப் பேதுருவின் பல்வேறு கிறிஸ்தவ அறிக்கைகளின் முதலானது வழியாக நாம் அறிகிறோம். இவ்வாசகத்தில் இயேசுவை மூன்று முறை மனிதராகக் குறிப்பிடுவதன் மூலம், அவர் பழைய ஏற்பாட்டில் தாம் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்காக, இறந்த ஒருவரை உயிர்ப்பிக்கும் அற்புதம் உண்மையில் நடந்தேறியது என்று பார்வையாளர்களைத் தன் பக்கம் ஈர்க்கிறார். திருத்தூதர்களே உயிர்த்தக் கிறிஸ்துவை நேரில் கண்ட சாட்சி. மேலும் நம்பிக்கையாளர் சமூகத்தின் மீது தூய ஆவியார் இறங்கிய நிகழ்வும் ஒரு வலுவான ஆதாரம்.

### இரண்டாம் வாசகம்: 1 பேதுரு 1 : 17 – 21

திருத்தூதர் பணிகளில் பதிவு செய்யப்பட்டுள்ள தனது மறையுரைகளை பேதுரு தனது கடிதத்தில் விளக்குகிறார். வெவ்வேறு இடங்களிலுள்ள பிற இனத்தார் மத்தியில் வாழும் விசுவாசிகளுக்கு எழுதுகையில், குறிப்பாக வெளிநாட்டில் இருக்கும் போது அவர்கள் எவ்வாறு செயல்படவும் நடந்து கொள்ளவும் வேண்டும் என்பதன் முக்கியத்துவத்தை அவர் இங்கு வலியுறுத்துகிறார். முன்னதாக, சமூகங்கள் கடந்த தலைமுறையினரால் வடிவமைக்கப்பட்ட அறிவொளியற்ற வழிகளில் வாழ்ந்தனர். ஆனால், இயேசுவின் அடையாளத்தைப் பற்றி அறிந்து கொண்ட பின் தந்தையாகிய இறைவன் அவரை மரித்தோரிலிருந்து உயிர்ப்பித்ததால் அவர் வழங்கியப் புது வாழ்வுக்கு தங்களை மாற்றிக் கொள்ள வேண்டிய நேரம் இது.

### நற்செய்தி வாசகம்: யோவான் 24 : 13 – 35

ஒரு அந்நியனைப் போலிருந்த இயேசு தன் சீடர்கள் இருவருடன் தொடர்பேற்படுத்தி தன் முழு வாழ்க்கையைச் சுருக்கத்தை அவர்கள் வழியாகத் தெரிந்து கொண்டார். தங்களது அவநம்பிக்கையால் எருசலேமையும் அவர்களது நண்பர்களையும் விட்டுச் செல்லும் அவர்களுக்கு அறிவூட்ட இயேசு வேதத்தைப் பயன்படுத்திப் பொறுமை காத்தார். அதற்குள், மற்றவரின் தேவையைக் கண்டு விருந்தோம்பல் செய்ததால், அவர்களின் கண்கள் ஓரளவுக்குத் திறக்கப் பட்டது. அதனால், அவர்கள் இறுதியாக உயிர்த்த இறைவனை அடையாளம் கண்டு அப்பம் பகிர்தலில் பங்கேற்க முடிந்தது. உடனடியாக, அவர்கள் தங்களது இப்புதிய அனுபவத்தைப் பகிர்ந்து கொள்ள தங்களது சமூகத்திற்குத் திரும்ப முடிவு செய்தனர்.

# தியானிப்போம்:

***இந்த வார வாசகங்களின் சிந்தனையை ஆழப்படுத்த உதவும் இப்பகுதியை ஒருவர் சத்தமாக வாசிக்கவும். சிந்தித்துப் பதிலளிக்கத் தகுந்த நேரத்தை அனுமதிக்கவும்.***

நாம் அனைவரும் நம் வாழ்வில் மாற்றங்களை அனுபவிக்கிறோம். நமக்கு வயதாவது நம் கட்டுப்பாட்டிற்குள் இல்லை. உணவு பழக்கத்தை மாற்றியமைப்பது, சமூக ஊடகங்களில் நேரம் செலவழிப்பது போன்ற தற்போதைய விவகாரங்கள் நம்மால் தொடங்கப்பட்டதால் நாம் அதில் அதிருப்தி அடைந்து மாற்றங்களை மேற்கொள்கிறோம். ஒன்று மட்டும் நிச்சயம் ~ மாற்றம் கடினமானது. ஏனெனில் புத்தாண்டுத் தீர்மானம் எடுப்போர் இதற்குச் சான்றளிக்கலாம். இது பேதுருவின் நனவான நோக்கமா இல்லையோ, உயிர்த்த இயேசுவைச் சந்தித்தப் பின் அவர் முற்றிலும் மாறுபட்டவராக இருந்தார் என்பது தெளிவாகிறது. எப்போதும் முணுமுணுத்துக் கொண்டிருந்த ஒரு சீடன் தன் தலைவரைப் போலவே, அவர் உடலால் இல்லாதிருந்தும் மறையுரை ஆற்றி குணப்படுத்தக் கூடிய ஒரு தலைவராக மாறினார். தூய ஆவியைப் பெற்று, வேதத்திலும் நம்பிக்கையாளர் சமூகத்திலும் தன்னை முழுமையாகப் பயன்படுத்தும் அளவுக்கு பேதுரு ஒரு மாற்றத்தைப் பெற்றார் என்றால் அது மனவுறுதியால் மட்டும் சாத்தியமில்லை.

அதே போல், அவருடைய சாட்சியம் நம் அனைவருக்கும் நேரடியாக இல்லை என்றாலும், இதே கருவிகளையே நாமும் கொடையாகப் பெற்றுள்ளோம். திருத்தூதர்கள் எம்மாவு நகருக்குச் சென்றதைப் போலவே, சில எதிர்மறை உணர்வுகள் நம்மை முந்திச் செல்ல அனுமதிக்கிறோம். இயேசுவின் பாஸ்கா மறைபொருள் அவருடையப் பாடுகளையும் இறப்பையும் உயிர்ப்பையும் விண்ணேற்பையும் உள்ளடக்கியது. இருப்பினும், முதல் இரு நிகழ்வுகள் பரிமான அளவில் அதிக கவனத்தைப் பெற்றுள்ளன. புனித வெள்ளி ஆராதனை நமது ஆலயங்களில் அதிக மக்களை ஈர்த்தாலும், பாடுபட்டச் சிலுவை நமது மதத்தில் முக்கிய இடம்பெற்றுள்ளது. சமநிலையுடன் ஒரு முன்னோக்கும் புரிதலும் இருந்தாலும், அது நம் நம்பிக்கைக்கு அடிப்படையான உயிர்ப்புக் கதைகளைப் பற்றி சிந்திக்கவும் அதைப் பற்றி பேசவும் அதிக நேரம் செலவிட உதவும்.

புதிய ஏற்பாடு முழுவதுமுள்ள பேதுரு மற்றும் திருத்தூதர்களின் முன்மாதிரியைப் பின்பற்றி எதிர்ப்புகளுக்கும் சவால்களுக் கும் மத்தியில் மகிழ்ச்சியை அனுபவிக்கவும் அதே வேளையில், உயிர் கொடுக்கும் சீடர்களாக உருவெடுக்கவும் உயிர்த்த ஆண்டவரிடமிருந்து வல்லமை பெறுவதில் நாம் நம்பிக்கையுடன் இருக்கலாம்.



# சிந்திப்போம்:

## பகிர்வுக்கானக் கேள்விகள்

*இப்பகுதி தனிநபர் மற்றும் குழுக்கள் பகிர்வுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதன் பிற்பகுதி அன்பியங்கள், ஆலயப் பணிக்குழுக்கள், குடும்பங்கள் என்றக் குறிப்பிட்டச் சூழலுக்கேற்பக் குழுப் பகிர்வுகளைத் தூண்ட உதவும். அனைவரும் இக்கேள்விகளைச் சிந்தித்துப் பதிலளிக்கத் தகுந்த நேரத்தை அனுமதிக்கவும்.*

## தனிநபர் சிந்தனை & பகிர்வுக்கானக் கேள்விகள்

*கீழுள்ளவற்றைச் சிந்திக்க நேரம் ஒதுக்கவும். நீங்கள் குழுவில் இருந்தால் பகிரவும்.*
*உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதி எது?*
*உங்கள் உள்ளத்தைத் தூண்டியது எது? அதை சற்று சிந்தியுங்கள்.*

- பேதுரு நம்பியதால் தீவிர மாற்றத்தைச் சந்தித்தார். இறை வார்த்தையால் உங்கள் வாழ்வில் எத்தகையத் தீவிர மாற்றத்தை நீங்கள் செய்துள்ளீர்கள்?
- இறை வார்த்தை உங்களுக்குப் புது வாழ்வைத் தரவில்லை என்றால், புது வாழ்வை எங்கு தேடுவீர்கள்?

## குழுச் சூழலுக்கு ஏற்றப் பகிர்வுக்கானக் கேள்விகள்

*உங்கள் சூழலுக்கு ஏற்ப பின்வரும் கேள்விகளில் ஒன்றை நீங்கள் சிந்திக்க விரும்பலாம்.*

### அன்பியங்கள்:

*உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிப் பகிருங்கள்.*
*நீங்கள் வாசிக்கக் கேட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிப் பகிருங்கள்.*

- பிறரின் விரக்திகளுக்கும் வலிகளுக்கும் உங்கள் சமூகம் செவிகொடுக்கிறதா?
- சமூகத்தில் உள்ளவர்களுக்கு நீங்கள் எத்தகைய வாழ்வளிக்கும் வார்த்தைகளை வழங்குவீர்கள்? அவை இறை வார்த்தைகளா?

### ஆலயப் பணிக்குழுக்கள்:

*உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிப் பகிருங்கள்.*
*நீங்கள் வாசிக்கக் கேட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிப் பகிருங்கள்.*

- பாஸ்கா காலத்தில், உங்கள் பணிக்குழு பழைய வழிகளுக்கு மரித்து, உயிர்த்த ஆண்டவர் அளிக்கும் புது வாழ்வுக்குள் சென்றுள்ளதா?
- இந்த உயிர்ப்புக் கொண்டாட்டம் பணிக்குழுவினர்கள் உங்களுக்கு ஏற்படுத்திய காயங்களிலிருந்தும் பாரபட்சங்களிலிருந்தும் உங்களை விடுவித்துள்ளதா?

### குடும்பங்கள்:

*உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியை குடும்பத்தாருடன் பகிருங்கள். நீங்கள் வாசிக்கக் கேட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிப் பகிருங்கள்.*

- உயிர்ப்புக் கொண்டாட்டத்தினால் உங்கள் குடும்பம் எவ்வழிகளில் புதிதாகியுள்ளது?
- ஒருவரோடொருவர் கொண்டுள்ள உறவுகளைப் பலப்படுத்த, குடும்ப வாழ்வின் மிகவும் விருப்பமான வழிகளைக் காட்ட உயிர்த்த கிறிஸ்துவை அனுமதிக்கிறீர்களா?

## நம் வாழ்விற்காக:

*உறுதியான செயல்களால் பதிலளிக்க இறைவார்த்தை எவ்வாறு நம்மைக் குழுவாகவோ அல்லது தனித்தனியாகவோ அழைக்கிறது என்பதைக் கண்டறியவும்.*

நம் இதயங்களில் இயேசு குடியிருந்தால் புது வாழ்வு எப்போதும் சாத்தியம்.

## நற்செயல் புரிவோம்:

*வேறு ஒரு நபருக்கு இயேசுவின் நற்செய்தியைப் பகிரவும் அறிவிக்கவும் நீங்கள் செய்ய வேண்டிய செயல்.*

நீங்கள் செபிக்கும் அந்த நபருடன் நீங்கள் எழுதியதைப் பகிர்ந்து, அதற்கான பதிலை அவரிடம் கேளுங்கள். நீங்கள் ஒரு பணிக்குழுவோடோ, சமூகத்தோடோ, குடும்பமாகவோ இருந்தால், நீங்கள் எழுதியதையும், நீங்கள் செபிக்கும் அந்த நபர் தந்த பதிலையும் அவர்களோடு பகிருங்கள். உங்களைக் கவர்ந்த மூன்று வசனங்களைப் பயன்படுத்தி மீண்டும் செபியுங்கள்.

## நிறைவு செபம்:

*நிறைவு செபத்தை அனைவரும் இணைந்து சொல்லி இந்த அமர்வை முடிக்கவும். பங்கேற்ற அனைவருக்காகவும் சமூகத்திற்காகவும் செபியுங்கள்.*

எங்கள் தந்தையாகிய இறைவா, நாங்கள் உம்மை நம்பவில்லை என்றாலும், உமது வழிகளிலிருந்து விலகிச் செல்லத் தீர்மானித்தாலும், எங்கள் மீது நீர் கொண்டுள்ள உமது அன்பும் பெருந்தன்மையும் ஒருபோதும் நின்றுவிடாது. நாங்கள் அனைவரும் எங்கள் வாழ்வில் மாற்றங்களை அனுபவிக்கிறோம், அவற்றில் பல மாற்றங்களை எதிர்க்கிறோம். உயிர்த்த இறைவனை சந்தித்த போது பேதுரு முற்றிலும் மாறினார். வாழ்வைப் பற்றிய ஒரு சமநிலைப் கண்ணோட்டத்தைக் கொண்டிருக்கவும், உயிரைக் கொடுக்கும் சீடராக உருமாற்றப்படவும் எங்களுக்கு உள்ளும் புறமும் நாங்கள் சவால்களையும் எதிர்ப்பையும் அனுபவிக்கும் போது நாங்கள் மாற வேண்டும் என்பதைப் புரிந்துணர நீர் எங்களை அழைக்கின்றீர். உமது வார்த்தை நீர் தேர்ந்தெடுத்த உம் மக்களுக்கு எப்போதும் வழிகாட்டுகிறது. இந்தப் பாஸ்கா காலத்தில் நாங்கள் இந்த நம்பிக்கைப் பயணத்தை மேற்கொள்ளும்போது, உமது வார்த்தையைத் தொடர்ந்து எங்களுக்கு வெளிப்படுத்த நாங்கள் உமக்கு நன்றியுள்ளவர்களாக இருப்போமாக. எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம். ஆமென்.

# என் பாஸ்கா காலச் சிந்தனைக் குறிப்புகள்

*நீங்கள் செபிக்கும் அந்த நபருடன் நீங்கள் எழுதியதைப் பகிர்ந்து, அதற்கான பதிலை அவரிடம் கேளுங்கள். நீங்கள் ஒரு பணிக்குழுவோடோ, சமூகத்தோடோ, குடும்பமாகவோ இருந்தால், நீங்கள் எழுதியதையும், நீங்கள் செபிக்கும் அந்த நபர் தந்த பதிலையும் அவர்களோடு பகிருங்கள். உங்களைக் கவர்ந்த மூன்று வசனங்களைப் பயன்படுத்தி மீண்டும் செபியுங்கள்.*



# பாஸ்கா காலத்தின் நான்காம் ஞாயிறு

# வார்த்தைக்குச் செவிகொடுத்தல்

## தொடக்கச் செபம்:

*இன்று நமக்குச் சிந்தனை உணர்வூட்டவும், இறைவார்த்தைக்கும் மற்றவருக்கும் திறந்த மனதுடன் செவிசாய்க்கவும், அனைவரும் ஒரு தொடக்கப் பாடலைப் பாடி, கீழுள்ள தொடக்கச் செபத்தை இணைந்து சொல்லவும்.*

எங்கள் தந்தையாகிய இறைவா, உமது நல்லாயனை எங்களுக்கு அளித்து, பல யுகங்களாக உமது குரலைப் பலர் கேட்க, நீர் அவர்களை அழைத்து வழிநடத்தினீர். பல கவனச் சிதறல்கள் இருந்த போதிலும், உமது குரல் அவர்களுக்குத் தெளிவாக ஒலித்தது. மாபெரும் இவ்வுலகில் உமது வார்த்தையால், எங்களை உருவாக்கிய உம் முன்னிலையில், நாங்கள் ஒரு குழந்தையாக இருக்க வேண்டும் என்பதே உமது அழைப்பு. வீண் பெருமைக்காகவும் தனி மனித நாட்டத்தாலும் சண்டை சச்சரவுகளால் சீரழிந்து கிடக்கும் இவ்வுலகில், உமது வார்த்தையால் மட்டுமே நாங்கள் உண்மையான ஞானத்தையும், அமைதியையும், வழிகாட்டுதலையும் பெற முடியும். எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைக் கொண்டாடும் இந்த நேரத்தில், தீமை மீது நன்மை பெற்ற வெற்றியைக் கொண்டாடுகிறோம். சுய அழிவிலிருந்து விடுதலையையும் உண்மையான ஒளியையும் தேடும் அனைவருக்கும் நீர் ஒரு கலங்கரை விளக்காக இருந்தருளும். எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மைப் போற்றிப் புகழ்ந்து மன்றாடுகிறோம். ஆமென்.



# இறைவார்த்தை:

*மூன்று வாசகங்களையும் அதன் விளக்கங்களையும் சத்தமாக வாசித்தப் பின், அமைதியான சிந்தனைக்கு சிறிது நேரம் ஒதுக்கவும். குழுவின் முதல்வர் கொடுக்கப்பட்டுள்ள விளக்கங்களைப் பயன்படுத்தி வாசகங்களைத் தெளிவுபடுத்துவார். அமர்வுக்கு முன் குழுவின் முதல்வர் தகுந்தத் தயாரிப்புடன் இருக்கப் பரிந்துரைக்கப்படுகிறது.*

## முதல் வாசகம்: திருத்தூதர் பணிகள் 2 : 36 – 41

செவிகொடுத்தல் என்பது வெறும் செவிப்புலன் அல்ல என்பதை நாம் அறிவோம். நம் காதுகள் வழியாக ஊடுருவும் ஒலிகள் உண்மையாக வேரூன்ற நம் உள்ளத்திலும் இதயத்திலும் ஒரு இடத்தைக் கண்டடைய வேண்டும். மக்கள் பேதுருவின் மறையுரையைக் கேட்டு தங்கள் உள்ளம் குத்தப்படுமளவுக்கு அவரது வார்த்தைக்குச் செவிமடுத்தார்கள். தங்கள் இதயங்களைத் தொட அனுமதித்தது போல் நாமும் வார்த்தைக்குச் செவிசாய்க்க நம் இதயங்களை திறக்கும் போது, நம்முள் மனமாற்றம் ஏற்படும். ஆண்டவருக்குச் செவிசாய்க்கும் இதயம் அவருக்குத் தகுந்த விதத்தில் பதிலளிக்க நம்மை வழிநடத்தும்.

## இரண்டாம் வாசகம்: 1 பேதுரு 2 : 20 – 25

நமக்காகத் துன்பங்களைச் சகித்துக் கொண்டு தம் தந்தைக்குக் கீழ்ப்படிந்த ஆண்டவருக்கும், வழி தவறிச் சென்ற ஆடுகளைப் போன்ற நமக்குமிடையே உள்ள வேறுபாட்டை பேதுருவின் இக்கடிதம் வெளிப்படுத்துகிறது. கீழ்ப்படிதலே அந்த வித்தியாசம். உண்மையானக் கீழ்ப்படிதல் என்றாலென்ன என்பதற்கு நம் ஆண்டவரே முன்மாதிரி. ‘கீழ்ப்படிதல்‘ என்ற சொல் இலத்தீன் வார்த்தையான ‘செவிகொடுத்தல்’ என்பதிலிருந்து பெறப்பட்டது. எனவே நம் தந்தையாகிய இறைவனுக்குக் கீழ்ப்படிவதற்கான அழைப்பு அவருடைய வார்த்தையைக் கேட்பதற்கான அழைப்பாகும். இறைவனுக்குக் கீழ்ப்படிவதை நோக்கிய நமது பயணம், நாம் கீழ்ப்படிய, செவிகொடுத்துக் கற்றுக் கொள்வதிலிருந்தே தொடங்குகிறது.

## நற்செய்தி வாசகம்: யோவான் 10 : 1 – 10

ஆயனுக்கும் ஆடுகளுக்கும் இடையிலான உறவு செவிகொடுத்தலில் உள்ளது. ஆடுகள் ஆயனின் குரலை அறிந்து கேட்கின்றன. இப்படிப்பட்ட உறவு ஒரே இரவில் நிகழக்கூடிய ஒன்றல்ல என்பதை இன்றைய நற்செய்தி வாசகம் நமக்கு நினைவூட்டுகிறது. ஆடுகள் முதலில் ஆயனின் குரலைக் கேட்கும் முன், அவரே தங்களைக் கவனித்துக் கொள்பவர் என்பதை மெதுவாக உணரும். அடையாளம் கண்டுகொள்ளும். அவர்கள் குரலை அடையாளம் கண்டுகொண்ட பிறகுதான் அவர்கள் மேய்ப்பனைப் பின்தொடர்கிறார்கள், அந்நியரை அல்ல. நம் தந்தையுடனான நமது உறவு அப்படித்தான் ~ நாம் நம் தந்தையின் குரலைக் கேட்கிறோம், இந்த குரலை நம் இதயத்தில் ஆழமாக அடையாளம் காணும்போது கடவுளைப் பின்பற்றத் தொடங்குகிறோம்.



# தியானிப்போம்:

***இந்த வார வாசகங்களின் சிந்தனையை ஆழப்படுத்த உதவும் இப்பகுதியை ஒருவர் சத்தமாக வாசிக்கவும். சிந்தித்துப் பதிலளிக்கத் தகுந்த நேரத்தை அனுமதிக்கவும்.***

ஆடுகள் புத்திசாலியானவை அல்ல. அவற்றை நாம் எளிதில் திசைத்திருப்பி விடலாம். இது உண்மையா இல்லையா என்பது நகரவாசிகளான நம்மால் உறுதிப்படுத்தக்கூடிய ஒன்றல்ல. ஆனால், சில காலத்திற்குப் பின் அவை தங்கள் ஆயனை நன்கு அறிந்து கொள்ளும், அவரை மிகுந்த விருப்பத்துடன் எங்கும் பின்பற்றும் என்பதே உண்மை. வெறும் ஆயன் ஆடுகள் என்ற உருவகத்தைத் தாண்டி அவற்றுக்கிடையே வளரும் உறவில் நாம் கவனம் செலுத்தினால், இந்த உவமையின் ஆழத்தை நாம் நன்கு உணர்ந்து, இறைவனுடனான நமது உறவு எப்படி இருக்க வேண்டும் என்பதைச் சிறப்பாக அறிந்து கொள்ளலாம்.

நமது விசுவாச வாழ்வு இறைவனுடன் நாம் கட்டியெழுப்பும் உறவை அடிப்படையாகக் கொண்டது. அது நம் முழு இருதயத்தோடும் அவருக்கு செவிகொடுப்பதன் வழியாக வளர்க்க வேண்டிய ஒரு உறவு. இதனால் நாம் அவரை நன்கு அறிந்து, அன்பு செய்து வளர முடியும். இந்த உறவை நாம் நமக்காக வைத்துக் கொள்ள முடியாது. இந்த வாரம் நாம் தேவ அழைத்தல் ஞாயிறைக் கொண்டாடுகிறோம். நாம் அனைவரும் இறைவனால், இறைவனுக்காகவும் பிறருக்காகவும், தனித்துவமான வழிகளில் வாழ அழைக்கப்பட்டுள்ளோம் என்பதை நினைவில் கொள்வது நல்லது.

ஆரோக்கியமான உறவுக்கு நல்ல தொடர்பு தேவை. இறைவனின் குரலுக்கு மனமுவந்து செவிகொடுப்பதன் வழியாகவும், இந்தக் குரல் நம் இதயத்தைத் தொட அனுமதிப்பதாலும் நாம் நல்ல தொடர்பை வளர்க்க முடியும். உலகின் கடை எல்லை வரை சென்று நற்செய்தி அறிவிக்க வேண்டும் என்ற அவரது அழைப்பில் இறைவனைப் பின்பற்றும் திறனை நாம் இங்கு தான் பயன்படுத்தத் தொடங்குகிறோம். இதுவே மறைப்பணி ~ இறைவனோடு ஒரு வலுவான உறவைப் பேணிக் காப்பது. நம் இதயங்களிலிருக்கும் அவர் குரலுக்குச் செவிகொடுப்பதை அடிப்படையாகக் கொண்ட ஒரு உறவு, நாம் எப்படி நம் வாழ்வை அன்பாகவும் உண்மையாகவும் வாழ்கிறோம் என்பதன் வழியாக நாம் அவருக்குப் பதிலளிப்பதை அடிப்படையாகக் கொண்ட உறவு.



# சிந்திப்போம்:

## பகிர்வுக்கானக் கேள்விகள்

*இப்பகுதி தனிநபர் மற்றும் குழுக்கள் பகிர்வுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதன் பிற்பகுதி அன்பியங்கள், ஆலயப் பணிக்குழுக்கள், குடும்பங்கள் என்றக் குறிப்பிட்டச் சூழலுக்கேற்பக் குழுப் பகிர்வுகளைத் தூண்ட உதவும். அனைவரும் இக்கேள்விகளைச் சிந்தித்துப் பதிலளிக்கத் தகுந்த நேரத்தை அனுமதிக்கவும்.*

## தனிநபர் சிந்தனை & பகிர்வுக்கானக் கேள்விகள்

*கீழுள்ளவற்றைச் சிந்திக்க நேரம் ஒதுக்கவும். நீங்கள் குழுவில் இருந்தால் பகிரவும்.*
*உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதி எது?*
*உங்கள் உள்ளத்தைத் தூண்டியது எது? அதை சற்று சிந்தியுங்கள்.*

- நீங்கள் விவிலியம் வாசிக்கும் போதோ, செப செய்யும் போதோ, திருப்பலியில் பங்கேங்கேற்ற போதோ, நம் தந்தையாகிய இறைவன் உங்களோடு பேசிய தருணங்களை நினைவில் கொள்ளுங்கள். அப்போது உங்கள் உணர்வு எப்படி இருந்தது? இறைவனுக்குப் பதிலளிக்க நீங்கள் எவ்வாறு தூண்டப்பட்டீர்கள்?
- நன்கு செவிகொடுப்பதே இறைவனோடுள்ள நல்ல உறவின் நோக்கம். நீங்கள் இப்போது இறைவனோடு கொண்டுள்ள உங்கள் உறவை எப்படி விவரிப்பீர்கள்? இந்த உறவை கட்டியெழுப்பக் இறைவன் உங்களை என்ன செய்ய வேண்டுமென அழைக்கிறார்?

## குழுச் சூழலுக்கு ஏற்றப் பகிர்வுக்கானக் கேள்விகள்

*உங்கள் சூழலுக்கு ஏற்ப பின்வரும் கேள்விகளில் ஒன்றை நீங்கள் சிந்திக்க விரும்பலாம்.*

### அன்பியங்கள்:

*உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிப் பகிருங்கள்.*
*நீங்கள் வாசிக்கக் கேட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிப் பகிருங்கள்.*

- இப்பாஸ்கா காலத்தில் இறைவார்த்தைக்குச் செவிகொடுப்பதில் உங்கள் சமூகம் எவ்வாறு முன்னேற முடியும்?
- நம் தந்தையாகிய இறைவனின் குரலுக்குச் செவிகொடுக்க உங்கள் சமூகம் எப்படி ஒருவரையொருவர் ஊக்குவிக்கிறது?

### ஆலயப் பணிக்குழுக்கள்:

*உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிப் பகிருங்கள்.*
*நீங்கள் வாசிக்கக் கேட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிப் பகிருங்கள்.*

- உங்கள் உயிர்ப்புக் கொண்டாட்டம் நம் தந்தையாகிய இறைவனின் குரலுக்குச் செவி கொடுப்பதற்கான வழிகளைக் காட்டுகிறதா?
- ஆலயத்திலும் உலகிலும் பணியாற்றப் புறப்பட வேண்டும் என்ற ஆண்டவருடைய அழைப்பைப் பின்பற்றத் தேவையானத் திறனைகளைப் பயன்படுத்த பணிக்குழு ஒரு சிறந்தக் கருவியாக இருக்க வேண்டும்.

### குடும்பங்கள்:

*உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியை குடும்பத்தாருடன் பகிருங்கள். நீங்கள் வாசிக்கக் கேட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிப் பகிருங்கள்.*

- குடும்பமாக நாம் ஒருவருக்கொருவர் செவிகொடுக்க உயிர்ப்புக் கொண்டாட்டம் உதவியிருக்கிறதா? நாம் ஆண்டவருக்குச் செவிகொடுத்து அதிகமாக வளர, ஒரே குடும்பமாக ஒருவருக்கொருவர் நன்கு செவிசாய்க்க என்ன செய்யலாம்?
- இறைவனுடனான உறவில் நாம் மேன்மேலும் வளர (செபம், விவிலிய வாசிப்பு போன்ற) என்ன ஆன்மீக வழிமுறைகளைக் குடும்பமாகப் பின்பற்றலாம்?

## நம் வாழ்விற்காக:

*உறுதியான செயல்களால் பதிலளிக்க இறைவார்த்தை எவ்வாறு நம்மைக் குழுவாகவோ அல்லது தனித்தனியாகவோ அழைக்கிறது என்பதைக் கண்டறியவும்.*

ஆண்டவருக்குச் செவிகொடுக்கும் இதயம் அவருடன் ஆழமான நல்ல உறவை வளர்க்க நம்மை வழிநடத்தும். நம்மை எங்கு பணியாற்ற ஆண்டவர் அழைக்கிறார் என்பதை அறியும் வேளையில், நம் வாழ்வின் யதார்த்தத்தில் நம்மால் இதைச் செய்ய முடியும்.

## நற்செயல் புரிவோம்:

*வேறு ஒரு நபருக்கு இயேசுவின் நற்செய்தியைப் பகிரவும் அறிவிக்கவும் நீங்கள் செய்ய வேண்டிய செயல்.*

நீங்கள் எழுதியவற்றை மறு ஆய்வு செய்து, எதையாவது மாற்ற வேண்டுமா என்று சரிபார்க்கவும். உங்களைக் கவர்ந்த மூன்று வசனங்களைப் பயன்படுத்தி மீண்டும் செபியுங்கள்.

## நிறைவு செபம்:

*நிறைவு செபத்தை அனைவரும் இணைந்து சொல்லி இந்த அமர்வை முடிக்கவும். பங்கேற்ற அனைவருக்காகவும் சமூகத்திற்காகவும் செபியுங்கள்.*

இறைவா, உமது வார்த்தையைச் சிந்திக்கும் இவ்வேளையில் நீர் உமது இதமானப் பிரசன்னத்தோடு எங்களோடிருந்து செவிகொடுத்தமைக்கு நன்றி செலுத்துகிறோம். உம்மோடும் உம் வார்த்தையோடும் நாங்கள் வைத்திருக்கும் உறவின் அடிப்படையில் எங்களது விசுவாச வாழ்வு அமைந்துள்ளது. உமது வார்த்தைக்கு முழு மனதோடு செவிகொடுப்பதன் வழியாக இந்த உறவு ஊட்டம் பெறுவதால் நாங்கள் அதன்படி வாழ முடிகிறது. உமது வார்த்தைக்கு செவிகொடுப்பதன் வழியாக உமது குரல் எங்களை நேர்வழியில் செலுத்துவதை நாங்கள் உணர முடிகிறது. எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம். ஆமென்.



# என் பாஸ்கா காலச் சிந்தனைக் குறிப்புகள்

*நீங்கள் எழுதியவற்றை மறு ஆய்வு செய்து, எதையாவது மாற்ற வேண்டுமா என்று சரிபார்க்கவும். உங்களைக் கவர்ந்த மூன்று வசனங்களைப் பயன்படுத்தி மீண்டும் செபியுங்கள்.*



## பாஸ்கா காலத்தின் ஐந்தாம் ஞாயிறு

# வார்த்தை நம்மை வாழ்வுக்குள் அழைத்துச் செல்கிறது

### தொடக்கச் செபம்:

*இன்று நமக்குச் சிந்தனை உணர்வூட்டவும், இறைவார்த்தைக்கும் மற்றவருக்கும் திறந்த மனதுடன் செவிசாய்க்கவும், அனைவரும் ஒரு தொடக்கப் பாடலைப் பாடி, கீழுள்ள தொடக்கச் செபத்தை இணைந்து சொல்லவும்.*

என்றும் வாழும் எல்லாம் வல்ல தந்தையே, உமது செயல்களுக்கு எங்கள் கண்களைத் திறந்து, உமது வார்த்தைக்கு செவிகொடுத்து, தூய ஆவியாரின் செயல்பாட்டிற்கு எங்கள் இதயங்களைத் திருப்புவதே எங்களது விருப்பம். இதனால் எங்கள் வாழ்வின் எல்லாவற்றிலும் உமது பிரசன்னத்தை உணர்ந்து, கண்டு, கேட்டு, அன்பு செய்து, போற்றி, மாட்சிப்படுத்துவோமாக. உம்மோடு தூய ஆவியாரின் ஒன்றிப்பில் இறைவனாய் என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்கின்ற உம் திரு மகனும் எங்கள் ஆண்டவருமாகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம். ஆமென்.



# இறைவார்த்தை:

*மூன்று வாசகங்களையும் அதன் விளக்கங்களையும் சத்தமாக வாசித்தப் பின், அமைதியான சிந்தனைக்கு சிறிது நேரம் ஒதுக்கவும். குழுவின் முதல்வர் கொடுக்கப்பட்டுள்ள விளக்கங்களைப் பயன்படுத்தி வாசகங்களைத் தெளிவுபடுத்துவார். அமர்வுக்கு முன் குழுவின் முதல்வர் தகுந்தத் தயாரிப்புடன் இருக்கப் பரிந்துரைக்கப்படுகிறது.*

## முதல் வாசகம்: திருத்தூதர் பணிகள் 6 : 1 – 7

தொடக்கக் காலத் திரு அவை வளர்ந்த போது, பிற இனத்திலிருந்து சமூகத்தோடு இணைக்கப் பட்டவர்கள் அன்றையக் கலாச்சார தாக்கங்களுக்கும் தத்துவங்களுக்கும் ஏற்றவாறு தங்களை மாற்றிக் கொள்ள வேண்டியிருந்தது. எனவே மதம் மாறியவர்களின் வருகை அவநம்பிக்கையைச் சந்தித்தது. அனைவரையும் ஒருங்கிணைக்கும் முயற்சியில் பெரிய அளவில் பதற்றம் இல்லாமல் இல்லை. ஆனாலும், நாளுக்கு நாள் கிறிஸ்தவ சமூகம் மிகவும் பெருகியதால் திருத்தூதர்கள் பிரச்சினைகளை ஒப்புக்கொண்டாலும் அவர்களால் அப்பிரச்சினைகளுக்கு முறையாக கவனம் செலுத்த முடியவில்லை. ஒற்றுமையின்மை இருந்த போதிலும் தூய ஆவியாரின் வல்லமை செயல்படுவதை நம்மால் காண முடிகிறது. சமூகத்திலும் இயேசு கிறிஸ்துவிலும் ஆழமான ஒற்றுமையை ஆதரிக்கவும் வளர்க்கவும் ஏழு கிரேக்கத் திருத்தொண்டர்கள் நியமிக்கப்பட்டதன் மூலம் சமூகத்திற்குள் ஒரு முறையான அமைப்பு உருவாக்கப்பட்டது. ஆசீர்வதிக்கப்பட்ட அவர்களின் மறைப்பணி தேவாலய வாழ்வில் ஒரு தெய்வீகமானப் பணியாக இருந்தது.

## இரண்டாம் வாசகம்: 1 பேதுரு 2 : 4 – 9

ஒரு முழு கட்டடத்தின் நிலையை நிர்ணயிக்கும் அடித்தளக் கல்லே என்றும் மூலைக்கல்லாக அழைக்கப்படுகிறது. இயேசுவை மெசியா என ஏற்றுக் கொள்ளாதவர்களுக்கு எதிரான நேரடி உரையில் தூய பேதுரு 118ம் திருப்பாடலைக் குறிப்பிட்டு, அவர்கள் தடுமாறி விழுவர் என்று குறிப்பிடுகிறார். இயேசுவை மூலைக்கல்லாகக் கொண்டு கட்டப்பட்ட ஆலயமும் இறை மக்களும், இயேசு வழியாகக் கூடி நம் தந்தையாகிய இறைவனை அணுக முடியும். இந்த விசுவாசிகளின் புதிய சமூகமே நம் தந்தையாகிய இறைவன் வாழும் இல்லம். எனவே, ‘தேர்ந்து எடுக்கப்பட்ட வழிமரபினர், அரச குருக்களின் கூட்டம், தூய மக்களினம், அவரது உரிமைச் சொத்தான மக்கள்’ என்ற பட்டத்தைப் பெற்ற நாம் நம் தந்தையாகிய இறைவனிடமிருந்து பிரிந்து பாவத்தின் ஒடுக்குமுறைக்கு ஆளாகப் போவதில்லை. பணிக்கான நமது அழைப்பின் கண்ணியத்திலும், பணியாற்ற அழைக்கப்பட்ட நமது சமூகத்தின் கண்ணியத்திலும் பிறரை இறைவனோடு உறவு கொள்ளச் செய்வதில் நாம் ஒவ்வொருவரும் நம்மை நாமே பார்த்துக் கொள்ள அழைக்கப்படுகிறோம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

## நற்செய்தி வாசகம்: யோவான் 14 : 1 – 12

இன்றைய நற்செய்தி வாசகம் இயேசுவின் பாடுகளுக்கு முந்தைய ஒரு நிகழ்விற்குள் நம்மை அழைத்துச் செல்கிறது. யோவான் 14ம் அதிகாரத்தின் தொடக்கத்தில், இயேசு சீடர்களிடம், தான் உடலால் அவர்களோடு இல்லாத போது, அவருடைய நற்செய்தியை தனித்து வாழ வேண்டியிருக்கும் என சீடர்களை தயார்படுத்தும் போது, ‘நீங்கள் உள்ளம் கலங்க வேண்டாம்’ என்று சீடர்களுக்கும் நமக்கும் கூறுகிறார். இயேசு எங்கு செல்கிறார் என்று அவருடைய சீடர்கள் அறியாத போது, அங்கு செல்வதற்கான வழி எப்படி எங்களுக்குத் தெரியும் என்று தோமா இயேசுவை எதிர்கொள்கிறார். மாறாக, பிலிப்பு இயேசுவிடம் நம் அனைவருக்காகவும் பரிந்து பேசுகிறார்: ‘ஆண்டவரே, தந்தையை எங்களுக்குக் காட்டும். அதுவே போதும்.’ இந்த வார்த்தைகளே நமது வாழ்க்கைப் பயணத்தின் முழு நோக்கத்தையும் திசையையும் நமக்குச் சுருக்கமாகக் கூறுகின்றன. ஒன்று மட்டுமே அவசியம்: இயேசுவை அறிந்து அன்பு செய்தால், நம்மால் நம் தந்தையாகிய இறைவனை அறிந்து, அன்பு செய்து பணியாற்ற முடியும். ஏனெனில் இயேசுவே வழியும் உண்மையும் வாழ்வுமானவர். இருப்பினும், இயேசுவின் செயல்களைக் கண்டிருந்தும், வார்த்தைகளைக் கேட்டிருந்தும், சீடர்களால் அவர் கூறியதை அவர்களால் உணர முடியவில்லை. இறைவனின் திருவுளத்திற்கு முழுமையாகக் கீழ்ப்படிவதிலிருந்தும், இயேசு நமக்குக் காட்டியபடி வாழ்வதிலிருந்தும் நம்மைத் தடுப்பது எது என்பதை நாம் ஆராய்ந்து பார்க்க, இயேசு சீடர்களுக்கு அன்று அளித்த பதில் மிகவும் முக்கியமானது.: ‘இவ்வளவு காலம் நான் உங்களோடு இருந்தும் நீங்கள் என்னை அறிந்து கொள்ளவில்லையா?’ இன்று இது தான் நமது நிலை.



## தியானிப்போம்:

*இந்த வார வாசகங்களின் சிந்தனையை ஆழப்படுத்த உதவும் இப்பகுதியை ஒருவர் சத்தமாக வாசிக்கவும். சிந்தித்துப் பதிலளிக்கத் தகுந்த நேரத்தை அனுமதிக்கவும்.*

தோமாவையும் பிலிப்பையும் போலவே, நாம் நம்புவதற்கும் விசுவசிப்பதற்கும் முன் சரியான வழியைத் தெரிந்து, உண்மையான நிலையை அறிய விரும்புகிறோம். நம் சொந்த முயற்சிகளாலும் வழிமுறைகளாலும் நாம் திட்டமிட்டுள்ள நமது வாழ்வில் நாம் எத்தனை முறை போராடுகிறோம், தடுமாறிக் கொண்டிருக்கிறோம்? சில வேளைகளில், நாம் இறைவனோடு கொண்டுள்ள நமது உறவில் சரியாக வாழ்வதில் நாம் வாழ வேண்டிய வாழ்வின் முழுமைக்குமான ஆதாரத்தைக் காட்டும்படி அவருக்கே சவால் விடவும், வசப்படுத்தவும் முயற்சி செய்கிறோம். வேலை, குடும்பம், ஆலயம், சமூகம் ஆகியவற்றில் நமது சாதனைகளாலும் செயல்பாடுகளாலும் இந்த வாழ்வை அலங்கரிப்பதில் எவ்வளவு நேரத்தை செலவிடுகிறோம? இந்த நடவடிக்கைகள் அனைத்தும் இயேசுவை நமது மூலக்கல்லாகக் கொள்ளாமல், நமது சொந்தத் தராதரங்களின்படி நல்லதொரு கிறிஸ்தவ வாழ்வை வாழத் தடுக்கும் பொறிகளாக மாற்றும் அபாயம் உள்ளது. தந்தையுடனான உறவில் காணப்படும் உண்மையான வாழ்வைப் பற்றி நம்மைக் குறைவாகச் சிந்திப்பதிலிருந்து அவை நம்மைத் திசைதிருப்பக்கூடும். இயேசுவின் 'நானே வழி' என்பது தான் நாம் தந்தையை அடையக்கூடிய ஒரே வழி என்பதை அழுத்தமாக உச்சரிக்கிறது. இயேசுவைப் பின்பற்றுவதற்கான நமது முயற்சிகளில் குறுக்கு வழிகளோ பாதி வழிகளோ இல்லை. இயேசுவே உண்மை: கண்ணுக்குத் தெரியாத இறைவனின் முழு வெளிப்பாடு. தந்தையைப் பற்றி நாம் தெரிந்து கொள்ள வேண்டிய அனைத்தும் அவரே. நாம் இயேசுவை விட்டு வெறுமையாக இருந்தால், இன்றும் என்றும், தனி நபர்களாகவோ, இறைவனின் தூய மக்களாகவோ, நாம் யார், நாம் எதற்காக இருக்கிறோம் என்ற உண்மையை நம்மால் என்றும் அறிய முடியாது.

இயேசுவில் வாழ்வதற்கான ஆதாரம் என்ன, எங்கே? இயேசுவின் 'நானே வாழ்வு' என்பதன் யதார்த்தம் தொடக்கக் கால சமூகங்களில் காணப்பட்டது. முதல் வாசகத்திலிருந்து, இறைவனின் மக்கள் வழியாக இயேசு எவ்வாறு தனது பணியைச் செய்தார் என்பதை அறிந்தோம். அதில் கருத்து வேறுபாடுகள், அவதூறுகள், துன்புறுத்தல்கள் நிறைந்திருந்தன. ஆனால், அவர்கள் இயேசுவைத் தங்களின் நம்பிக்கையாகவும் வாழ்வின் அடித்தளமாகவும் கொண்டு, அச்சமூகம் அன்புக்கும் பணிக்கும் அடையாளமாக மாறியது. நமது முயற்சி ஒரு திரு அவையாக இயேசுவை உலகிற்கு கொண்டு செல்வதாகும். அது ஒரு மனித முயற்சி மட்டுமல்ல, 'தேர்ந்தெடுக்கப்பட்ட வழி மரபினர், அரச குருக்களின் கூட்டம், தூய மக்களினம், அவரது உரிமைச் சொத்தான மக்கள்' என்ற அழைப்புக்கு பதிலளிக்கும் ஒரு தெய்வீகப் பணி. இயேசு வழியாக, நம் தந்தையாகிய இறைவன் நமக்கு வாழ்வதற்கான வழியையும், இறைவன் யார் என்ற உண்மையையும் அளித்துள்ளார். உண்மையான வாழ்வு இயேசு வழியாக மட்டுமே சாத்தியம்.

# சிந்திப்போம்:

## பகிர்வுக்கானக் கேள்விகள்

*இப்பகுதி தனிநபர் மற்றும் குழுக்கள் பகிர்வுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதன் பிற்பகுதி அன்பியங்கள், ஆலயப் பணிக்குழுக்கள், குடும்பங்கள் என்றக் குறிப்பிட்டச் சூழலுக்கேற்பக் குழுப் பகிர்வுகளைத் தூண்ட உதவும். அனைவரும் இக்கேள்விகளைச் சிந்தித்துப் பதிலளிக்கத் தகுந்த நேரத்தை அனுமதிக்கவும்.*

## தனிநபர் சிந்தனை & பகிர்வுக்கானக் கேள்விகள்

*கீழுள்ளவற்றைச் சிந்திக்க நேரம் ஒதுக்கவும். நீங்கள் குழுவில் இருந்தால் பகிரவும்.*
*உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதி எது?*
*உங்கள் உள்ளத்தைத் தூண்டியது எது? அதை சற்று சிந்தியுங்கள்.*

- உங்கள் வாழ்வின் மூலைக்கல் எதுவென நீங்கள் சொல்வீர்கள்?
- தோமா கண்டுபிடித்த உண்மை என்னவென்பதை இந்த உயிர்ப்புக் கொண்டாட்டம் உங்களுக்குக் காட்டியுள்ளதா?

## குழுச் சூழலுக்கு ஏற்றப் பகிர்வுக்கானக் கேள்விகள்

*உங்கள் சூழலுக்கு ஏற்ப பின்வரும் கேள்விகளில் ஒன்றை நீங்கள் சிந்திக்க விரும்பலாம்.*

### அன்பியங்கள்:

*உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிப் பகிருங்கள்.*
*நீங்கள் வாசிக்கக் கேட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிப் பகிருங்கள்.*

- இந்த உயிர்ப்புக் கொண்டாட்டத்தில் ஒரு சமூகமாக நீங்கள் கண்டுபிடித்த உண்மை என்ன?
- இந்தக் கண்டுபிடிப்பு ஒருவருக்கொருவர் கொண்டுள்ள உங்கள் உறவை மாற்றி, உயிர்ப்புக் கொண்டாட்டத்தின் புது வாழ்வை வாழ உங்களுக்கு உதவியதா?

### ஆலயப் பணிக்குழுக்கள்:

*உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிப் பகிருங்கள்.*
*நீங்கள் வாசிக்கக் கேட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிப் பகிருங்கள்.*

- உங்கள் ஆலயப்பணியில் இயேசுவே வழியாக, உண்மையாக, வாழ்வாக இருப்பதற்கான ஆதாரம் உள்ளதா? அது என்னவாக இருக்கும்?
- உயிர்ப்புக் கொண்டாட்டத்தினால் உங்கள் ஆலயப்பணி எந்தளவுக்கு உயிர் பெற்றுள்ளது?

### குடும்பங்கள்:

*உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியை குடும்பத்தாருடன் பகிருங்கள்.*
*நீங்கள் வாசிக்கக் கேட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிப் பகிருங்கள்.*

- உயிர்ப்புக் கொண்டாட்டத்தை நாம் தொடரும் போது உங்கள் குடும்பத்தில் ஏற்பட்டுள்ள மிகப் பெரிய விழிப்புணர்வு என்ன?

- ஒருவரோடொருவர் உறவாடுவதற்கான புதிய வழிகளைக் கொண்டிருப்பதற்கு இறை வார்த்தை எவ்வாறு நம்மை வழிநடத்துகிறது?

## நம் வாழ்விற்காக:

***உறுதியான செயல்களால் பதிலளிக்க இறைவார்த்தை எவ்வாறு நம்மைக் குழுவாகவோ அல்லது தனித்தனியாகவோ அழைக்கிறது என்பதைக் கண்டறியவும்.***

வார்த்தையான இயேசு வழியாக மட்டுமே வாழ்வின் உண்மையைக் கண்டறிந்து நாம் நம் வாழ்வை முழுமையாக வாழ முடியும்.

## நற்செயல் புரிவோம்:

***வேறு ஒரு நபருக்கு இயேசுவின் நற்செய்தியைப் பகிரவும் அறிவிக்கவும் நீங்கள் செய்ய வேண்டிய செயல்.***

நீங்கள் செபிக்கும் அந்த நபருடன் நீங்கள் எழுதியதைப் பகிர்ந்து, அதற்கான பதிலை அவரிடம் கேளுங்கள். பதிலைப் பெற்ற பின், அவரை உங்கள் சமூகக் கூட்டத்திற்கோ, பணிக்குழுக் கூட்டத்திற்கோ, குடும்பத்திற்கோ அழைக்கவும். இன்னும் சரியான நேரம் வராததால், அவரைத் திருப்பலிக்கு அழைக்காதீர்கள். உங்களைத் தாக்கிய மூன்று வசனங்களை மீண்டும் பிரார்த்தனை செய்யுங்கள்.

## நிறைவு செபம்:

***நிறைவு செபத்தை அனைவரும் இணைந்து சொல்லி இந்த அமர்வை முடிக்கவும். பங்கேற்ற அனைவருக்காகவும் சமூகத்திற்காகவும் செபியுங்கள்.***

எங்களை அன்பு செய்யும் எல்லாம் வல்ல தந்தையே, 'தேர்ந்தெடுக்கப்பட்ட வழிமரபினர், அரச குருக்களின் கூட்டம், தூய மக்களினம், அவரது உரிமைச் சொத்தான மக்கள்' என நீர் விடுத்த அழைப்புக்கேற்ப இயேசுவை இவ்வுலகிற்குக் கொண்டு செல்வதே திரு அவையாகிய எங்களின் முழு முயற்சி. தந்தையே, நீர் எங்களுக்கு இயேசுவை வாழ்வின் வழியாகவும் தெய்வீக உண்மையாகவும் அளித்திருக்கிறீர். இயேசுவே உண்மையான வாழ்வின் ஆதாரம். வாழ்வைப் பற்றி இவ்வுலகம் எத்தகையத் தவறனக் கருத்தைக் கொண்டிருந்தது என்பதை அவர் உயிர்த்தெழுந்து நிரூபித்தார். நிலையான மகிழ்ச்சிக்கான ஒரே வழியும், ஒவ்வொரு இதயத்தின் ஆழமான ஏக்கங்களை நிவர்த்தி செய்யும் உண்மையும் இயேசு ஒருவரே. உயிர்ப்பாலும் திருமுழுக்காலும் நாம் புதிதாக்கப்பட்டுள்ளோம். நாங்கள் எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக நாங்கள் என்றென்றும் உமது அன்புக்குக் கடன்பட்டிருக்கிறோம், உமக்கு நன்றி செலுத்துகிறோம். ஆமென்.



# என் பாஸ்கா காலச் சிந்தனைக் குறிப்புகள்

*நீங்கள் செபிக்கும் அந்த நபருடன் நீங்கள் எழுதியதைப் பகிர்ந்து, அதற்கான பதிலை அவரிடம் கேளுங்கள். பதிலைப் பெற்ற பின், அவரை உங்கள் சமூகக் கூட்டத்திற்கோ, பணிக்குழுக் கூட்டத்திற்கோ, குடும்பத்திற்கோ அழைக்கவும். இன்னும் சரியான நேரம் வராததால், அவரைத் திருப்பலிக்கு அழைக்காதீர்கள். உங்களைத் தாக்கிய மூன்று வசனங்களை மீண்டும் பிரார்த்தனை செய்யுங்கள்.*



# பாஸ்கா காலத்தின் ஆறாம் ஞாயிறு

# வார்த்தைக்குச் செவிகொடுத்தல்

## தொடக்கச் செபம்:

*இன்று நமக்குச் சிந்தனை உணர்வூட்டவும், இறைவார்த்தைக்கும் மற்றவருக்கும் திறந்த மனதுடன் செவிசாய்க்கவும், அனைவரும் ஒரு தொடக்கப் பாடலைப் பாடி, கீழுள்ள தொடக்கச் செபத்தை இணைந்து சொல்லவும்.*

விண்ணகத் தந்தையே, தவறாகப் புரிந்து, நிராகரித்திருந்தாலும் முதல் விசுவாசிகளை தூய ஆவியார், உயிருள்ள இறைவனின் ஆவியார், நம்பிக்கையில் நடத்தி, நம்பிக்கையில் நிலைத்திருக்க உதவினார். புதிதான இளம் திருச்சபை உயிர்வாழத் தூய ஆவியார் இன்றியமையாதவராக இருந்தார்.

ஓ தூய ஆவியாரே, காலங்காலமாக, உமது வழிகாட்டுதல் தேவைப்பட்ட அனைவர் மீதும் நீர் வந்து, ஒரே சமூகமாக, அவர்களின் பணிக்கும் அவர்களின் வாழ்வுக்கும் பொருத்தமான இறை வார்த்தைகள் எவை என்பதை அறிய உதவி செய்தீர். எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக இந்த அமர்வை நாங்கள் தொடங்குகிறோம். நீரே வழிநடத்தும். ஆமென்.



## இறைவார்த்தை:

*மூன்று வாசகங்களையும் அதன் விளக்கங்களையும் சத்தமாக வாசித்தப் பின், அமைதியான சிந்தனைக்கு சிறிது நேரம் ஒதுக்கவும். குழுவின் முதல்வர் கொடுக்கப்பட்டுள்ள விளக்கங்களைப் பயன்படுத்தி வாசகங்களைத் தெளிவுபடுத்துவார். அமர்வுக்கு முன் குழுவின் முதல்வர் தகுந்தத் தயாரிப்புடன் இருக்கப் பரிந்துரைக்கப்படுகிறது.*

### முதல் வாசகம்: திருத்தூதர் பணிகள் 8 : 5 – 8, 14 – 17

திருத்தூதர் பணிகளிலிருந்து எடுக்கப்பட்ட இந்த வாசகம், முதல் அதிகாரம் 8ம் வசனத்தில் காணப்படும் 'நீங்கள் எருசலேமிலும் யூதேயா, சமாரியா முழுவதிலும் உலகின் கடையெல்லை வரைக்கும் எனக்குச் சாட்சிகளாய் இருப்பீர்கள்' என்ற ஆலய விரிவாக்கத்தின் இரண்டாம் கட்டத்துடன் தொடர்புடையது. நற்செய்தி அறிவிக்கும் இந்த மறைப்பணி, யூதேயாவில் பரவத் தொடங்கியது. ஸ்தேவான் இந்நூலின் முந்தைய பகுதியில் நற்செய்திக்கு துணிவுடன் சாட்சி பகர்ந்தார். இவ்வேளையில், தொடக்கக் காலத் திரு அவையிலிருந்த ஏழு திருத்தொண்டர்களில் ஒருவரான பிலிப்பு யூதேயாவுக்கு அப்பாற்பட்ட இடங்களில் செய்த மறைப்பணியில் ஆசிரியர் முக்கியத்துவம் காட்ட விரும்பினார். யூதர்களால் 'மதவெறி' என்று கருதப்படும் சமாரியாவில் நடைபெற்றப் பணியின் குறிப்பிடத்தக்க விரிவாக்கமாகும். அது திருத்தூதர்களின் கவனத்தை ஈர்த்தது. பேதுருவும் யோவானும் மதம் மாறிய சமாரியர் மீது கைகளை வைக்கவே, அவர்கள் தூய ஆவியைப் பெற்று, இந்த மறைப்பணியை உறுதிப்படுத்தி, இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றும் வாழ்வுக்கான மாற்றங்களை உறுதிப்படுத்தினர்.

### இரண்டாம் வாசகம்: 1 பேதுரு 3 : 15 – 18

கிறிஸ்தவர்களுடன் சேர்ந்து வாழும் பிற இனத்தார் தங்களின் வாழ்க்கை முறையையும் உலகக் கண்ணோட்டத்தையும் புரிந்து கொள்ள முடியவில்லை. எனவே, அவர்கள் கிறிஸ்தவர்களை கேலி செய்துப் புறக்கணித்தனர். இதற்காகத் தான், பேதுருவின் முதல் கடிதத்தில் உள்ள வசனம் அன்றும் இன்றுமுள்ளக் கிறிஸ்தவர்களை, தங்களது விசுவாசத்திற்குக் கணக்குக் கொடுக்க நாம் எப்போதும் தயாராக இருக்க வேண்டும் என ஊக்குவிக்கிறது. விசுவாசத்திற்காக துன்புறும் போது, வேதனையான மரணத்தை அனுபவித்து, நம் தந்தையால் உயிர்ப்பிக்கப்பட்ட இயேசு கிறிஸ்துவை நாம் எதிர்கொண்டு, விசுவாசிகளாகிய நாம் அனைவரும் நம் தந்தையாகிய இறைவனிடம் நெருங்கி வர முடியும். இயேசு கிறிஸ்துவின் செயலால், கிறிஸ்தவர்கள் தங்களைத் தற்காத்து, சுற்றியிருப்போருக்கு விசுவாச சாட்சியாக மாறலாம். இருப்பினும், அவர்கள் துணிவோடும் மென்மையான அன்போடும் அதைச் செய்ய வேண்டும். நாமும் துன்பத்திற்கு பயப்படாதிருக்க ஊக்குவிக்கப்படுகிறோம். ஏனென்றால் கிறிஸ்து மரித்து மீண்டும் உயிர்த்தெழுந்தார். எனவே இந்த விசுவாசத்திற்கு நாம் மென்மையோடும் அன்போடும் சாட்சியாக இருக்க வேண்டும்.

## நற்செய்தி வாசகம்: யோவான் 14 : 15 – 21

தம்மைப் பின் தொடர அன்பு செய்வது மட்டுமே ஒரே வழி என்று இயேசு தன் சீடர்களுக்கும், நமக்கும், இன்றைய நற்செய்தி வாசகத்தின் வழியாகக் குறிப்பிடுகிறார். இயேசுவை அன்பு செய்வதும், நம் தந்தையாகிய இறைவனை அன்பு செய்வதும், வெறும் உதட்டளவில் அல்ல. மாறாக, அது உண்மையான அன்புச் செயல்களால் வெளிப்படுகிறது. நாம் நம் தந்தையாகிய இறைவனை உண்மையாக அன்பு செய்யும் போது, அது நம்மிடமுள்ள தாராள மனப்பான்மை, சுயநலம், விசுவாசம், நம் தந்தையாகிய இறைவனின் திருவுளத்திற்குக் கீழ்ப்படிதல் போன்ற குணங்கள் வழியாகப் பிரதிபலிக்கும். நாம் இயேசுவை அன்பு செய்து, நம் தந்தையாகிய இறைவனையும் இவ்விதமாக அன்பு செய்யும் போது, நம் தந்தையாகிய இறைவனுடைய அன்புச் செயலில் நாமும் பங்கெடுக்கிறோம். துணையாளர், உதவியாளர் என்று பொருள்படும் கிரேக்க வார்த்தையான 'பாரக்லேட்டோஸ்' என்னும், 'பாராக்லீட்' என்பவரை இயேசு நமக்கு வாக்களித்தார். தூய ஆவியாராகிய இந்தத் துணையாளர் தொடர்ந்து நமக்கு ஊக்கமளித்து, நம் தந்தையாகிய இறைவனின் அன்பில் நிலைத்திருக்க உதவுவார்.

## தியானிப்போம்:

*இந்த வார வாசகங்களின் சிந்தனையை ஆழப்படுத்த உதவும் இப்பகுதியை ஒருவர் சத்தமாக வாசிக்கவும். சிந்தித்துப் பதிலளிக்கத் தகுந்த நேரத்தை அனுமதிக்கவும்.*

இயேசு உயிர்த்தெழுந்த பின் திபேரியா கடலோரம் நின்ற பேதுருவிடம், 'நீ என்னை அன்பு செய்கிறாயா?' என்று கேட்டார். இயேசுவின் சீடர்களாகிய நாமும் பதிலளிக்க வேண்டிய மிக முக்கியமான கேள்வி இது தான். யோவானின் சமூகத்தைச் சார்ந்தத் தொடக்கக் கால விசுவாசிகளின் கூற்றுப்படி, ஒருவரைப் பின்பற்றுபவன் சீடனல்ல, ஒருவருடைய வாழ்வில் முழுமையாகப் பங்கு கொள்பவனே நல்ல சீடன். இது, இயேசுவின் அன்பை உண்மையாகத் தழுவி, நம்மையே 'அன்பாக்கிக்' கொள்வதைக் குறிக்கிறது. இது இயேசுவையும் நம் தந்தையாகிய இறைவனையும் முழு மனதுடன் அன்பு செய்வதாகும். இது நம் வாழ்வில் நமது கண்ணோட்டத்தை முற்றிலும் மாற்றி நம் தந்தையாகிய இறைவனை நோக்கி நம் பார்வையை செலுத்துவதாகும். இதனால் நாம் நம்மையே அன்பு செய்து பகிர்வதால் மற்றவர்களின் நன்மைக்காக உழைக்கிறோம். இவ்வாறாக நாம் அன்பு செய்யத் தேர்ந்தெடுக்கும் போது, சிறந்த சிறந்த ஆலோசகரும் பரிந்துரையாளருமானத் தூய ஆவியார் வார்த்தை வழியாக நமக்கு உதவி, நமக்கு பலத்தையும் உத்வேகத்தையும் கொடுப்பதால் நாம் தனித்திருக்க மாட்டோம் என்று இயேசு வாக்குறுதியளித்தார். நமக்கு மனித வரம்புகள் இருந்தாலும், தூய ஆவியார் நமது முழு திறனை அடைய உதவுதால், நாம் யாராக இருந்தாலும் நம்மால் வல்லமையானச் செயல்களைச் செய்ய முடியும். நிலைவாழ்வு எப்படி இருக்கும் என்பதற்கான முன்னறிவிப்பு இதுவே ~ பாவங்களிலிருந்தும் நம்மைக் கட்டுப்படுத்துபவையிலிருந்தும் விடுதலை பெற்று, மகிழ்ச்சியும் அன்பும் நிறைந்த ஒரு வாழ்வு.

இந்த மகிழ்ச்சியும் அன்பும் நிறைந்த ஒரு வாழ்வு, நாம் எதிர்கொள்ளும் சவால்களையும் துன்பங்களையும் ஒரு காரணத்தோடும், வித்தியாசமாக அதை வாழ்வதற்காக நோக்கத்தோடும் காண நம்மை அனுமதிக்கிறது. இயேசுவின் சிலுவை பாடுகளிலிருந்து வரும் மீட்பைப் பற்றி எல்லாரும் அறிந்து, எல்லா மனித குலமும் நம் தந்தையாகிய இறைவனுக்கு முன் நிலையான மகிழ்ச்சியை அனுபவிக்கும் வகையில் அதை உரிமையாக்க, யாரைக் கேட்டாலும் இந்தக் காரணத்தைக் கூற நாம் தயாராக இருக்க வேண்டும் என்று தூய பேதுருவின் கடிதம் நமக்கு நினைவூட்டுகிறது.

நம் வாழ்வில் நாம் மற்றவர்களிடம் அன்பைக் கொட்டித் தீர்க்க முடிவெடுத்தால், 'எருசலேமிலும் யூதேயா, சமாரியா முழுவதிலும் உலகின் கடையெல்லை வரைக்கும் சாட்சிகளாய் இருப்பதே' (தி. பணிகள் 1:8) சீடத்துவ வாழ்வு. இயேசுவின் சீடராய் இருப்போரின் வாழ்வு இப்படித்தான் இருக்கிறது. நாம் எங்கிருந்தாலும் தூய ஆவியார் நாம் செய்யும் எல்லாவற்றிலும் நம்மோடு இருப்பார் என்பதை நாம் அறிவோம். இதுவே இயேசுவின் வாக்குறுதி. வார்த்தைகளாலும் செயல்களாலும் அன்பின் செய்தியை அனைவருக்கும் பரப்புவதன் வழியாக நாம் 'உயிர்ப்பின் மக்களாக' இறைவனைப் புகழ்ந்து, அன்பு செய்து, மிகுந்த நம்பிக்கையோடு மகிழலாம். ஏனெனில், வார்த்தையே அன்பு, வார்த்தை உயிரளிக்கிறது, வார்த்தை வாழ்வளிக்கிறது.

# சிந்திப்போம்:

## பகிர்வுக்கானக் கேள்விகள்

*இப்பகுதி தனிநபர் மற்றும் குழுக்கள் பகிர்வுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதன் பிற்பகுதி அன்பியங்கள், ஆலயப் பணிக்குழுக்கள், குடும்பங்கள் என்றக் குறிப்பிட்டச் சூழலுக்கேற்பக் குழுப் பகிர்வுகளைத் தூண்ட உதவும். அனைவரும் இக்கேள்விகளைச் சிந்தித்துப் பதிலளிக்கத் தகுந்த நேரத்தை அனுமதிக்கவும்.*

## தனிநபர் சிந்தனை & பகிர்வுக்கானக் கேள்விகள்

*கீழுள்ளவற்றைச் சிந்திக்க நேரம் ஒதுக்கவும். நீங்கள் குழுவில் இருந்தால் பகிரவும்.*
*உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதி எது?*
*உங்கள் உள்ளத்தைத் தூண்டியது எது? அதை சற்று சிந்தியுங்கள்.*

- இந்த உயிர்ப்பு விழாவில் நீங்கள் எவ்வாறு உங்கள் மீது அன்பை வெளிப்படுத்தினீர்கள்?
- இந்த உயிர்ப்பு விழாவில் நீங்கள் எவ்வாறு உயிர்த்த இறைவன் மீது உங்கள் அன்பை வெளிப்படுத்தினீர்கள்?

## குழுச் சூழலுக்கு ஏற்றப் பகிர்வுக்கானக் கேள்விகள்

*உங்கள் சூழலுக்கு ஏற்ப பின்வரும் கேள்விகளில் ஒன்றை நீங்கள் சிந்திக்க விரும்பலாம்.*

### அன்பியங்கள்:

*உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிப் பகிருங்கள்.*
*நீங்கள் வாசிக்கக் கேட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிப் பகிருங்கள்.*

- உங்கள் சமூகம் எவ்வாறு அன்பில் நிலைத்து பிறரிடம் அன்பைக் கொண்டு செல்கிறது?
- நாம் எதிர்கொள்ளும் சவால்களையும் துன்பங்களையும், மகிழ்ச்சியும் அன்பும் நிறைந்த உயிர்ப்பு வாழ்வு ஒரு காரணத்துடனும் வித்தியாசமாக வாழ்வதற்கான நோக்கத்துடனும் கான அனுமதிக்கிறது. இது உங்கள் சமூகத்தில் எவ்வாறு வெளிப்படுகிறது?

### ஆலயப் பணிக்குழுக்கள்:

*உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிப் பகிருங்கள்.*
*நீங்கள் வாசிக்கக் கேட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிப் பகிருங்கள்.*

- இயேசுவின் அன்பை உண்மையாக ஏற்று அன்பாக மாற, நம்ப வேண்டிய அவசியமும் செயல்பட வேண்டிய அவசியம் உள்ளது. நீங்கள் நம்பவும் செயல்படவும் உங்கள் பணிக்குழு உங்களுக்கு எவ்வாறு உதவுகிறது?
- பணிக்குழு உறுப்பினர்களும் மற்றவர்களும் செய்த தாராளமான அன்புச் செயல்களின் தாக்கத்தைப் பற்றி பகிருங்கள். அதிலிருந்து நாம் என்ன கற்றுக் கொள்ளலாம்?



**குடும்பங்கள்:**

*உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியை குடும்பத்தாருடன் பகிருங்கள். நீங்கள் வாசிக்கக் கேட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிப் பகிருங்கள்.*

- நம் குடும்பத்தில் இயேசுவின் வாழ்வில் நாம் எவ்வாறு முழுமையாகப் பங்கு கொள்ளலாம்?
- நம் குடும்பத்தினர், நண்பர்கள், அண்டை வீட்டாரில் யாரிடம் இயேசுவின் அன்பைக் காண முடியும்? அதைச் செய்ய ஒரு திட்டத்தை அமைக்கவும்.

## நம் வாழ்விற்காக:

*உறுதியான செயல்களால் பதிலளிக்க இறைவார்த்தை எவ்வாறு நம்மைக் குழுவாகவோ அல்லது தனித்தனியாகவோ அழைக்கிறது என்பதைக் கண்டறியவும்.*

இயேசுவை அன்பு செய்ய அவருடைய வார்த்தையை அன்பு செய்து அதைப் பிறருக்கு வெளிப்படுத்த வேண்டும்.

## நற்செயல் புரிவோம்:

*வேறு ஒரு நபருக்கு இயேசுவின் நற்செய்தியைப் பகிரவும் அறிவிக்கவும் நீங்கள் செய்ய வேண்டிய செயல்.*

இத்தனை வாரங்களாக நீங்கள் செபித்த அந்த இறை வார்த்தைகளை அந்த நபரிடம் இப்போது கொடுங்கள்.

## நிறைவு செபம்:

*நிறைவு செபத்தை அனைவரும் இணைந்து சொல்லி இந்த அமர்வை முடிக்கவும். பங்கேற்ற அனைவருக்காகவும் சமூகத்திற்காகவும் செபியுங்கள்.*

இரக்கமுள்ள தந்தையே, செவிகொடுக்கவும் சிந்திக்கவும் நீர் தந்த இந்த வேளைக்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். உமது மகனின் உயிர்ப்புக் கொண்டாட்டம், எங்களுக்கு மகிழ்ச்சியையும் அன்பையும் அளித்து, நாங்கள் எதிர்கொள்ளும் சவால்களையும் துன்பங்களையும் ஒரு காரணத்தோடும், வித்தியாசமாக வாழ்வதற்கான நோக்கத்தோடும் காண அனுமதிக்கிறது. இயேசுவின் உயிர்ப்பு எங்கள் வாழ்வை அன்பால் பிறருக்கு ஊற்றவும், பெரும் செயல்களைச் செய்ய முழு மனதோடு முன்னோக்கிச் சென்று இறைவனின் திருவுளப்படி செய்து சாட்சி அளிக்கவும் உதவுகிறது. எங்களுடைய முழுத் திறனை அடையவும், நாங்கள் யாராக இருக்க வேண்டும் என்பதில் எப்பொழுதும் உமக்கும் விருப்பமானதைத் தேர்ந்தெடுக்கவும் தூய ஆவியார் உதவுவாராக. எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம். ஆமென்.

# என் பாஸ்கா காலச் சிந்தனைக் குறிப்புகள்

*இத்தனை வாரங்களாக*
*நீங்கள் செபித்த அந்த*
*இறைவார்த்தைகளை*
*அந்த நபரிடம்*
*இப்போது கொடுங்கள்.*



பாஸ்கா காலத்தின் ஏழாம் ஞாயிறு

# நம்மிடையே மாட்சி பெற்ற வார்த்தை

## தொடக்கச் செபம்:

*இன்று நமக்குச் சிந்தனை உணர்வூட்டவும், இறைவார்த்தைக்கும் மற்றவருக்கும் திறந்த மனதுடன் செவிசாய்க்கவும், அனைவரும் ஒரு தொடக்கப் பாடலைப் பாடி, கீழுள்ள தொடக்கச் செபத்தை இணைந்து சொல்லவும்.*

எங்கள் இறைவனாகிய தந்தையே, உமது வார்த்தை உண்மையாகவே உயர்த்தப்பட்டு மாட்சி அடைந்துள்ளது. ஒவ்வொரு ஆண்டும் உயிர்ப்புப் பெருவிழாவை இடைவிடாமல் கொண்டாடுவதற்கான காரணத்தை இது எங்களுக்குத் தருகிறது. இக்கொண்டாட்டம், உம்மால் எல்லாம் சாத்தியம் என்பதை நினைவூட்டுகிறது. உமது எல்லா மகத்தான செயல்களையும் அங்கீகரிக்க இந்தத் தருணம் உதவுகிறது. உயிர்த்த ஆண்டவரே, உமது அளப்பரிய அன்பால், மாட்சி பெற்ற வார்த்தை எங்களிடையே உள்ளது. என்றென்றும் வாழ்ந்து ஆட்சி புரியும் அவருக்காக நாங்கள் ஒன்றித்துப் பகிரும் இத்தருணம், உமது மாட்சி பெற்ற வார்த்தை எங்கள் மீது ஆட்சி செலுத்துவதாக. ஆமென்.



# இறைவார்த்தை:

*மூன்று வாசகங்களையும் அதன் விளக்கங்களையும் சத்தமாக வாசித்தப் பின், அமைதியான சிந்தனைக்கு சிறிது நேரம் ஒதுக்கவும். குழுவின் முதல்வர் கொடுக்கப்பட்டுள்ள விளக்கங்களைப் பயன்படுத்தி வாசகங்களைத் தெளிவுபடுத்துவார். அமர்வுக்கு முன் குழுவின் முதல்வர் தகுந்தத் தயாரிப்புடன் இருக்கப் பரிந்துரைக்கப்படுகிறது.*

## முதல் வாசகம்: திருத்தூதர் பணிகள் 1 : 12 – 14

விண்ணேற்றத்திற்குப் பின்னுள்ள வாழ்வைப் பற்றி முதல் வாசம் ஒரு கண்ணோட்டத்தை நமக்குத் தருகிறது. தங்கள் தலைவரான இயேசு கிறிஸ்து சாவை வென்று, இப்போது நம் தந்தையாகிய இறைவனோடு இருக்கிறார் என்ற மகிழ்ச்சியில் சீடர்கள் இன்னும் திளைத்திருக்க வேண்டும். ஆயினும், இதில் கசப்பான ஒன்றும் உள்ளது. இயேசு அவர்களோடு உடல் ரீதியாக இல்லை. மேலும், அவர்கள் காத்திருக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்பட்டனர். ஆனால், பின்னர் நடக்கப் போவது என்னவென்றும் அவர்களுக்குத் தெரியாது. அவர்களால் ஒன்று கூடி செபிக்கவும் காத்திருக்கவும் மட்டுமே முடியும். கிறிஸ்தவ நம்பிக்கை இயேசு கிறிஸ்துவுடனான சந்திப்பில் தொடங்குகிறது. ஆனால், அது அத்துடன் நின்றுவிடுவதில்லை. கிறிஸ்தவர்களாகிய நாம், ஒரே சமூகமாக ஒன்று கூடவும், ஒருவரையொருவர் ஊக்குவிக்கவும், நமக்கு வாக்களிக்கப்பட்ட எதிர்நோக்கை நினைவு கூரவும் கடமைப்பட்டிருக்கிறோம்.

## இரண்டாம் வாசகம்: 1 பேதுரு 4 : 13 – 16

மாட்சிமைக்கும் துன்பத்திற்கும் இடையே பிரிக்க முடியாத ஒரு தொடர்புண்டு என்று பேதுருவின் முதல் கடிதம் நினைவூட்டுகிறது. உண்மையில், புனித வெள்ளி இல்லாமல் உயிர்ப்புப் பெருவிழா இருக்க முடியாது. கிறிஸ்து நம் மீது கொண்ட அன்பினால் ஒரு கொடிய சாவை விரும்பி ஏற்றதால் அவர் மகத்தான மாட்சி பெற்றார். அதே போல், விசுவாசத்திற்காகவும் அன்பிற்காகவும் துன்புறும் கிறிஸ்தவர்கள் தங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட மாட்சியை அனுபவிப்பார்கள். இந்த நம்பிக்கை பல நூற்றாண்டுகளாக இறை அரசை இவ்வுலகில் கட்டியெழுப்பும் போது இயேசுவின் துன்பத்தைப் பகிர்ந்து கொண்டப் பல கிறிஸ்தவர்களுக்கு வல்லமை அளித்தது. திரு அவையின் மறைப்பணியை நிறைவேற்றுவதில் அவர்களின் அடிச்சுவடுகளை நாமும் பின்பற்ற வேண்டுமானால், நமக்கும் அதே நம்பிக்கை தேவை. நிச்சயமாக, இதை நம்புவது எளிதல்ல. தூய பேதுரு இதை அறிந்திருந்ததால், அவர் தனது சமூகத்தை ஊக்குவிப்பதற்காகத் தனது கடிதத்தை எழுதினார். நாமும் அதையே செய்யலாம். கிறிஸ்தவர்களாகிய நாம் வெளியே செல்ல வேண்டும். ஏனென்றால், மறைப்பணியே திரு அவையின் இயல்பு. இருப்பினும், நம் தந்தையாகிய இறைவன் நம்மிடமிருந்து எதை விரும்புகிறார் என்பதை நாம் உறுதியாக அறியாத வேளைகளும் உண்டு. அப்படிப்பட்ட வேளைகளில் நாமும் காத்திருந்து செபிக்க வேண்டும்.

## நற்செய்தி வாசகம்: யோவான் 17 : 1 – 11

யோவானின் பிரியாவிடை உரையிலிருந்து எடுக்கபட்ட இந்த வாசகத்தில் இயேசு தன் இறுதி அறிவுரையை தம் சீடர்களுக்குக் கூறுகிறார். இங்கு இரு முக்கியக் கருப்பொருள்கள் உள்ளன: மாட்சியும் அறிதலும். எவ்விதக் குறிப்பும் இல்லாமல், நம் தந்தையாகிய இறைவன் மாட்சி பெற இயேசு தன் செபத்தில் கூறினார். அவர் குறிப்பிட்டது சிலுவையையா உயிர்த்தெழுதலையா? (காண்க: யோவான் 3:14, 12:28-33). அநேகமாக இரண்டும் தான். இவை இரண்டும் மற்றொன்றிலிருந்து பிரிக்க முடியாதவை. மாட்சி பெற ஒரு விலை கொடுக்க வேண்டும் என்பதை மட்டும் இயேசு குறிப்பிடவில்லை. மாறாக, இறை மகனாக அவர் துன்பப்படுவதில் ஏதோ ஒரு மர்மமான மாட்சி இருப்பதாகக் கூறினார். வாசகத்தின் அடுத்தக் கருப்பொருள், நம் தந்தையாகிய இறைவனை அறிதல். இயேசு இதை நிலைவாழ்வோடு ஒப்பிடுகிறார். தொடக்க நூலில் ஆதாம் ஏவாளுக்கு இடையே உள்ளத் தாம்பத்திய உறவை 'அறிதல்' என்ற வினைச்சொல்லுடன் விவரிக்கப்பட்டது என்பதை நினைவில் கொள்க. எனவே, நம் தந்தையாகிய இறைவனுக்கும் நம் வாழ்வுக்கும் இடையே பிரிக்க முடியாததொரு தொடர்பு உள்ளது. இவை இரண்டும் தூய யோவானின் நற்செய்திக்கு முக்கியமானதால் அங்கே மீண்டும் மீண்டும் கூறப்பட்டுள்ளன. உதாரணமாக, இயேசு அவர்களைப் பற்றி நிக்கதேமிடம் சுருக்கமாகப் பேசினார் (காண்க: யோவான் 3:15-16), ஆனால், இப்போது அவர் தனது பிரியாவிடை உரையில் அவர்களுக்கு முழுமையான உரையை வழங்கினார்.

## தியானிப்போம்:

*இந்த வார வாசகங்களின் சிந்தனையை ஆழப்படுத்த உதவும் இப்பகுதியை ஒருவர் சத்தமாக வாசிக்கவும். சிந்தித்துப் பதிலளிக்கத் தகுந்த நேரத்தை அனுமதிக்கவும்.*

கிறிஸ்தவ நம்பிக்கையில் ஒரு முக்கியமான இறையியல் முரண்பாட்டைக் கருத்தில் கொள்வதே, நமது சிந்தனைக்காக இந்த மூன்று வாசகங்களையும் ஒன்றாகக் கொண்டுவருவதற்கான ஒரு வழி. ஒருபுறம், கிறிஸ்து மரித்து மாட்சியோடு உயிர்த்தெழுந்தார். அவரது பணி முடிந்தது. மறுபுறம், இது முழுவதாக முடிக்கப்பட்ட ஒரு ஒப்பந்தமல்ல. ஒருவர் கிறிஸ்துவின் மீட்பில் பங்கு பெற அதில் தானாக முன்வந்து பங்கேற்க வேண்டும். அந்த வகையில், மீட்பின் பணி, எல்லாப் படைப்புகளும் அதில் பங்கேற்றால் மட்டுமே எல்லா வகையிலும் முழுமை அடைய முடியும் (காண்க: உரோமையர் 8:19-23).

முதல் வாசகத்தில், இயேசுவின் விண்ணேற்றத்தைப் பற்றி வாசித்தோம். இது மகிழ்ச்சியான ஒரு முடிவைப் போல இருந்தாலும், சீடர்கள் வாக்குறுதியளிக்கப்பட்ட நிகழ்வுக்காகக் காத்திருக்கும் பகுதியோடு முடிந்தது. சீடர்கள் செய்ய வேண்டியதும் கற்றுக்கொள்ள வேண்டியதும் இன்னும் பல உள்ளன. இரண்டாம் வாசகத்தில், தூய பேதுரு தனது சமூகம் கிறிஸ்துவுக்காகத் துன்புறும் போது மனம் தளர வேண்டாம் என்று ஊக்குவித்தார். ஏனெனில் அவர்கள் இறுதியில் அவரது மாட்சியில் பங்கு பெறுவார்கள். இயேசுவின் சீடர்கள் அவருடைய இறப்புக்குப் பின் மாட்சியைக் காணவில்லை என்றால், இவ்வாக்கு நம்பிக்கையற்றதாகிவிடும். இயேசுவின் முன்மாதிரியால் நம்பிக்கை சாத்தியமானது. இறுதியாக, நற்செய்தியில் குறிப்பிடப்பட்ட இரு கருப்பொருள்களிலும் முரண்பாடு உச்சத்தை அடைகிறது. முதலில், மீட்புக்காக இயேசு சிலுவையில் மரித்ததே மாட்சியான செயல். ஆனால், இந்த மறைபொருள், உயிர்த்தெழுதல் வரை இந்த சாட்சிகளால் புரிந்து கொள்ள முடியாதப் புதிர். இரண்டாவதாக, நிலைவாழ்வு கிறிஸ்து வழியாக நம் தந்தையாகிய இறைவனை அறிந்து கொள்வதில் தொடங்குகிறது. ஆனால், முடிவு வருவதற்கு முன் நிலைவாழ்வின் எந்தவொரு அம்சத்தையும் நம்மால் முழுமையாக அனுபவிக்க முடியாது.

இவை நமக்கு உணர்த்தும் பொருள் என்ன? அர்த்தம்? பாஸ்கா காலம் என்பது உயிர்ப்புப் பெருவிழாவை நீண்ட காலமாக கொண்டாடப்படும் நேரமாகும். ஏனெனில் இது முக்கியமான மகிழ்ச்சியின் ஒரு நிகழ்வாகும். ஆயினும், இது பெந்தகோஸ்தே என்னும் ஏவுதலின் பாதையோடு முடிவடைகிறது. பெந்தகோஸ்தே நாள் கிறிஸ்தவர்களுக்கு திரு அவையின் பிறந்த நாள் என்று அடிக்கடி நினைவூட்டப்படுகிறது. ஏனென்றால் அன்று தான் இயேசுவின் சீடர்கள் நற்செய்தியை அறிவிக்கத் தொடங்கினார்கள். வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், மறைப்பணிக்காக பிறந்ததே திரு அவை. திருத்தந்தை பிரான்சிஸ் அடிக்கடி வலியுறுத்துவது போல், இதுவே அதன் அடையாளம். இன்றைய வாசகங்கள் கிறிஸ்துவின் பணியினால் அவர் பெற்ற மாட்சியைப் பற்றிக் நமக்குக் கூறுகின்றன. ஆனால், மீட்பின் பணி அனைத்து படைப்புக்களும் பங்கேற்றால் மட்டுமே முழுமையடைகிறது என்பதையும் அவை நமக்குக் கூறுகின்றன. திரு அவையாகிய நாம், நமக்குள் பணி என்னவென்று அறிந்துள்ளோம். ஆனால் கடினமான சவால்கள் இருந்த போதிலும் நாம் ஒருபோதும் மனம் தளரக் கூடாது. ஏனென்றால் கிறிஸ்துவே நமக்கு ஒரு முன்மாதிரியாக இருக்கிறார்.

# சிந்திப்போம்:

## பகிர்வுக்கானக் கேள்விகள்

*இப்பகுதி தனிநபர் மற்றும் குழுக்கள் பகிர்வுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதன் பிற்பகுதி அன்பியங்கள், ஆலயப் பணிக்குழுக்கள், குடும்பங்கள் என்றக் குறிப்பிட்டச் சூழலுக்கேற்பக் குழுப் பகிர்வுகளைத் தூண்ட உதவும். அனைவரும் இக்கேள்விகளைச் சிந்தித்துப் பதிலளிக்கத் தகுந்த நேரத்தை அனுமதிக்கவும்.*

## தனிநபர் சிந்தனை & பகிர்வுக்கானக் கேள்விகள்

*கீழுள்ளவற்றைச் சிந்திக்க நேரம் ஒதுக்கவும். நீங்கள் குழுவில் இருந்தால் பகிரவும்.*
*உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதி எது?*
*உங்கள் உள்ளத்தைத் தூண்டியது எது? அதை சற்று சிந்தியுங்கள்.*

- இந்தப் பாஸ்கா காலத்தில் இறைவார்த்தை உயிரோடு என்னுள் வருவதை என் வாழ்வில் நான் உணர்ந்திருக்கிறேனா?
- எனக்கு, இயேசு கிறிஸ்துவின் மீட்புப் பணியில் மனமுவந்துப் பங்கெடுப்பதன் பொருள் என்ன?

## குழுச் சூழலுக்கு ஏற்றப் பகிர்வுக்கானக் கேள்விகள்

*உங்கள் சூழலுக்கு ஏற்ப பின்வரும் கேள்விகளில் ஒன்றை நீங்கள் சிந்திக்க விரும்பலாம்.*

### அன்பியங்கள்:

*உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிப் பகிருங்கள்.*
*நீங்கள் வாசிக்கக் கேட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிப் பகிருங்கள்.*

- அண்டைவீட்டாரின் மீட்புப் பணியில் நம் சமூகம் எவ்வாறு பங்கேற்றது?
- திருஅவையின் மறைப்பணியில் நமது சமூகம் எவ்வாறு தீவிரமாகப் பங்கேற்க முடியும்?

### ஆலயப் பணிக்குழுக்கள்:

*உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிப் பகிருங்கள்.*
*நீங்கள் வாசிக்கக் கேட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிப் பகிருங்கள்.*

- ஆலயத்திற்கும் அதன் உறுப்பினர்களுக்கும் பணியாற்றுவதில் உங்கள் பணிக்குழு எத்தகையச் சோதனைகளை அனுபவிக்கிறது?
- திருஅவையின் மறைப்பணி நோக்கத்தில் உங்கள் பணிக்குழுவின் நோக்கம் எவ்வாறு பங்கேற்கிறது?

**குடும்பங்கள்:**

*உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியை குடும்பத்தாருடன் பகிருங்கள். நீங்கள் வாசிக்கக் கேட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிப் பகிருங்கள்.*

- இன்று ஒரு கிறிஸ்தவக் குடும்பமாக நீங்கள் எதிர்கொள்ளும் சில தற்காலச் சவால்கள் என்னென்ன?
- உங்கள் குடும்ப வாழ்வில் இறைவார்த்தையின் மாட்சிக்கு நீங்கள் எவ்வாறு சிறந்த சாட்சியாக இருக்க முடியும்?

## நம் வாழ்விற்காக:

*உறுதியான செயல்களால் பதிலளிக்க இறைவார்த்தை எவ்வாறு நம்மைக் குழுவாகவோ அல்லது தனித்தனியாகவோ அழைக்கிறது என்பதைக் கண்டறியவும்.*

வார்த்தையின் மாட்சி இயேசு மாட்சி பெற்றது. ஆண்டவருடைய வார்த்தையை நாம் வாழ்வாக்கும் போது நாம் அவரை மாட்சிப்படுத்துகிறோம்.

## நற்செயல் புரிவோம்:

*வேறு ஒரு நபருக்கு இயேசுவின் நற்செய்தியைப் பகிரவும் அறிவிக்கவும் நீங்கள் செய்ய வேண்டிய செயல்.*

நீங்கள் செபித்துக் கொண்டிருந்த அந்த நபரை உங்களுக்குத் தெரிந்த ஒரு குருவானவரோடு சந்தித்து உரையாட அழைக்கவும்.

## நிறைவு செபம்:

*நிறைவு செபத்தை அனைவரும் இணைந்து சொல்லி இந்த அமர்வை முடிக்கவும். பங்கேற்ற அனைவருக்காகவும் சமூகத்திற்காகவும் செபியுங்கள்.*

ஆண்டவராகிய இறைவா, பாஸ்கா காலத்தின் நிறைவை நாங்கள் நெருங்குகையில், கிறிஸ்துவின் மீட்புப் பணியில் பங்கேற்க நாங்கள் தானாக முன்வர வேண்டும் என்பதை நன்கு அறிந்திருக்கிறோம். கடினமான சவால்களும் துன்பங்களும் இருந்தாலும், நாங்கள் மனம் தளராமல் எங்கள் நம்பிக்கையை உயிருள்ளதாக வைத்திருக்க இந்த உயிர்ப்பின் மகிழ்ச்சி எங்களை ஊக்குவிப்பதாக. ஏனெனில் அனைத்தையும் சகிப்போரே இறுதியில் அவருடைய மாட்சியில் பங்கு பெற முடியும் என்பதை நாங்கள் இன்று அறிந்துள்ளோம். இயேசுவின் முன்மாதிரியால் எங்கள் நம்பிக்கை சாத்தியமடைவதாக. ஆமென்.

# என் பாஸ்கா காலச் சிந்தனைக் குறிப்புகள்

*நீங்கள் செபித்துக்
கொண்டிருந்த அந்த நபரை
உங்களுக்குத் தெரிந்த ஒரு
குருவானவரோடு சந்தித்து
உரையாட அழைக்கவும்.*



## தூய ஆவியார் ஞாயிறு

# வார்த்தையால் நிறைவேறிய வாக்குறுதி

### தொடக்கச் செபம்:

*இன்று நமக்குச் சிந்தனை உணர்வூட்டவும், இறைவார்த்தைக்கும் மற்றவருக்கும் திறந்த மனதுடன் செவிசாய்க்கவும், அனைவரும் ஒரு தொடக்கப் பாடலைப் பாடி, கீழுள்ள தொடக்கச் செபத்தை இணைந்து சொல்லவும்.*

விண்ணகத் தந்தையே, உமது அற்புதமான அன்பிற்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். தூய ஆவியாரின் மிகத் தாராளமான வரங்களுடன் இந்த அன்பு பாய்ந்தோடியது. உமது இந்த உன்னதமானப் பிரசன்னத்தை எங்களுக்கு வழங்குவதில் எங்கள் மீது நீர் கொண்ட அக்கறை எவ்வளவு அற்புதமானது என்பதை அறிவோம். நம்பிக்கையாளர்களின் வாழ்வில் தூய ஆவியாரின் வழிகாட்டுதலால் எத்தகைய அற்புதங்கள் நிகழ்ந்தன என்பதை விவிலிய வார்த்தைகளால் அறிந்து கொண்டோம். தூய ஆவியாரின் வழியாக அவர்கள் பெற்ற அதே உத்வேகமின்றி அத்தகைய அற்புதங்கள் எதையும் செய்ய முடியாது என்பதை ஏற்றுக் கொள்ள இந்தத் தருணத்தை நாங்கள் எடுத்துக் கொள்கிறோம். நாங்கள் உம்மை நோக்கிச் செல்லும் போது உமது வார்த்தையும் தூய ஆவியாரும் மட்டுமே எங்களை வழிநடத்தும் ஒரே ஒளி. எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம். ஆமென்.



## இறைவார்த்தை:

*மூன்று வாசகங்களையும் அதன் விளக்கங்களையும் சத்தமாக வாசித்தப் பின், அமைதியான சிந்தனைக்கு சிறிது நேரம் ஒதுக்கவும். குழுவின் முதல்வர் கொடுக்கப்பட்டுள்ள விளக்கங்களைப் பயன்படுத்தி வாசகங்களைத் தெளிவுபடுத்துவார். அமர்வுக்கு முன் குழுவின் முதல்வர் தகுந்தத் தயாரிப்புடன் இருக்கப் பரிந்துரைக்கப்படுகிறது.*

### முதல் வாசகம்: திருத்தூதர் பணிகள் 2 : 1 – 11

மேலறை, வீட்டின் மற்ற பகுதிகளிலிருந்தும், பொதுமக்களின் பார்வையிலிருந்தும் விலகி இருக்கும் இந்த இடம்தான் வல்லமையளிக்கும் இடம். நம் தந்தையாகிய இறைவன், எங்கும் நிறைந்திருப்பதிலும், எல்லாம் வல்ல ஞானத்திலும், தம் பிள்ளைகள் ஒவ்வொருவரையும் எப்படிக் கவனித்து, தூய ஆவியாரை அவர்களுடைய இதயங்களுக்குள் அனுப்புகிறார் என்பதை நினைத்து ஒருவர் ஆச்சரியப்பட முடியும். இன்று சிலருக்கு, இது வாழ்வை மாற்றும் சந்திப்புக்களாகவோ, குறைந்த அளவில் அற்புதங்களோ நிகழலாம். மற்றவர்களுக்கு, இது அன்பான உள்ளம் அறியும் ஒரு எளிய சந்திப்பாகவும் இருக்கலாம். அது எப்படியிருந்தாலும், அவர் நமக்கு அளித்த வாக்குறுதி (தி. பணிகள் 2:39) உறுதியானது திடமானது ~ நாம் அவரை நம் இதயங்களில் வைத்திருந்தால், அவர் தன் பிள்ளைகள் வழியாகப் பேசுவார்.

### இரண்டாம் வாசகம்: 1 கொரிந்தியர் 12 : 3 – 7, 12 – 13

இந்த வாசகம், நாம் அனைவரும் ஒரே உடலாகிய திருஅவையின் உறுப்புகள் ~ நாம் ஒவ்வொருவரும் நம் தந்தையாகிய இறைவனின் உருவிலும் சாயலிலும் தனித்துவமாக உருவாக்கப்பட்டு, இவ்வுலகில் அவருடைய பணியை நிறைவேற்ற உதவும் வரங்களை நமக்குப் பொழிந்துள்ளார் என்பதை நினைவூட்டுகிறது. நாம் தூய ஆவியாரைச் சந்திக்கிறோம், அவர் தரும் வரங்களை நமக்குள் பெற்றுக் கொண்டு, நமது பணியை அறிந்து கொள்வது ஒரு நிலையான போராட்டமாகத்தான் இருக்கும். ஆவியானவர் நம் இதயங்களுக்குள் வந்தவுடன், அந்த வரங்களைப் பயிற்சி செய்வதற்கும், சமூகங்களின் ஒற்றுமையை நோக்கி, எவ்வளவு கடினமாக இருந்தாலும், ஒன்றாகச் செயல்படுவதற்கான வழிகளைக் கண்டறியவும் நாம் ஒரு சமூகத்தைக் கண்டறிய வேண்டும். ஒருவேளை இதனாலேயே நம் தந்தையாகிய இறைவன் நம் ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு கொடைகளையும் திறமைகளையும் வழங்கியுள்ளார். அதனால் ஒரே எண்ணம் கொண்ட சகோதர சகோதரிகளின் சமூகத்தில் பொது நலனுக்காக அவற்றைப் பயன்படுத்த முடியும்.



## நற்செய்தி வாசகம்: யோவான் 20 : 19 – 23

முதல் வாசகத்தைப் போலவே, இப்பகுதியும் இயேசுவின் சீடர்கள் பயத்தோடும், பதட்டத்தோடும் விரக்தியில் தத்தளிக்கும் ஒரு வல்லமையானப் படத்தை எடுத்துரைக்கிறது. பின்னர், இயேசு அவர்கள் மத்தியில் தோன்றி அவர்கள் மீது உயிர் மூச்சை ஊதிய போது, அது ஒரு மாற்றமான சந்திப்பாக அமைந்தது. அந்தக் 'கிறிஸ்துவின் சந்திப்பின்' விளைவு, சீடர்களில் ஒரு தீவிரமான மாற்றத்தை உண்டாக்கியது. அவர்கள் பெற்றத் துணிவு, அவர்களை வெளியே அனுப்பி, அவருடைய பெயரால் அறிக்கையிட அனுமதிக்கிறது (2 திமோ 1:7 & எசா 41:13). அதே வேளையில், எவருடையப் பாவங்களை அவர் மன்னிக்க விரும்பினார்களோ அவையும் மன்னிக்கப்பட்டன. எளிமையாகச் சொன்னால், இயேசு பாவத்தின் மீது கொண்டுள்ள அதே அதிகாரத்தை அவர்களுக்கும் அளித்திருக்கிறார். எனவே, இது நம் தந்தையாகிய இறைவனைத் தவிர வேறு யாரிடமிருந்தும் வரவில்லை. எனவே, இயேசுவில் மட்டுமே நம்பிக்கை வைப்பதன் வழியாக நம் தந்தையின் திருவுளத்திற்கு நாம் அடிபணிகிறோம். அவர் தம் திரு மகனும் நம் மீட்பருமான இயேசுவுக்குக் கொடுத்த அதே அதிகாரத்தை நமக்கும் தருகிறார்.

## தியானிப்போம்:

*இந்த வார வாசகங்களின் சிந்தனையை ஆழப்படுத்த உதவும் இப்பகுதியை ஒருவர் சத்தமாக வாசிக்கவும். சிந்தித்துப் பதிலளிக்கத் தகுந்த நேரத்தை அனுமதிக்கவும்.*

இன்றைய வாசகங்கள், இறைவனின் பராமரிப்பில் நம்பிக்கை கொள்வதன் விளைவு பற்றி மிக வல்லமையான செய்திகளை நமக்கு வழங்கியுள்ளன. மேலும், தூய ஆவியாரை நமக்குத் துணையாளராக அனுப்பும் அளவுக்கு அவர் நம்மை எவ்வளவு ஆழமாக கவனித்துக் கொள்கிறார் என்று புலனாகிறது. பெந்தகொஸ்தே நாளில் தூய ஆவியாரின் வருகை திரு அவைக்கு ஒரு திருப்புமுனையாகும். அங்கு சீடர்கள் தூய ஆவியாரால் பலப்படுத்தப்பட்டு, அனைவருக்கும் புரியும் மொழியில் அறிக்கையிடத் தொடங்குகிறார்கள் (தி. பணிகள் 2:4-7). அது மட்டுமின்றி, திருமுழுக்குப் பெற்ற சீடர்களுக்கும், நம் ஒவ்வொருவருக்கும் மறைப்பணிக்குத் தேவையான அனைத்துக் கொடைகளையும் தூய ஆவியார் தன்னுடன் கொண்டு வருகிறார் (1 கொரி 12:4-7). நமது சாதி, மதம், இனம், நிலை, தற்போதைய சூழ்நிலை போன்ற எதையும் பொருட்படுத்தாமல், இறைவன் நம் ஒவ்வொருவருக்கும் வரமளிக்கிறார். இது நாம் அவரது பெயரால் செய்யும் பணிக்காகவே (1 கொரி 12:5, 13). நம் தந்தையாகிய இறைவன் எவ்வளவு தாராளமானவர், நாம் கேட்காத வரங்களையும் நமக்களித்து, நம் மீது தமது அன்பை வெளிப்படுத்தவும், அவர் எப்பொழுதும் நம்முடன் இருக்கிறார் என்பதை உறுதிப்படுத்தவும் செய்கிறார்.



பெற்றக் கொடைகளை அங்கீகரித்து அவற்றைத் தொடர்ந்து பயிற்சி செய்வதன் மூலம் நாம் நம் அன்புத் தந்தைக்கு நம் நன்றியறிதலைக் காட்டும் வழியாகும். அதை அவர் விரும்பிக் கேட்கிறார் என்பதற்காக அல்ல, நமது சமூகத்தின் நலனுக்காக அக்கொடைகளைப் பயிற்சி செய்வதன் மூலம், நம் விசுவாசப் பயணத்தில் நமக்கு மற்ற வாய்ப்புகளை அது திறக்க வழிவகுக்கும். அங்கு நாம் இதே போல் தொடப்பட்ட சகோதர சகோதரிகளைச் சந்திக்கலாம். அவ்வாறு செய்வதன் மூலம், சமூகத்தில் தூய ஆவியாரின் வல்லமையை ஒருவர் உணரத் தொடங்குவார். மேலும் செபிக்கும் சமூகத்தின் ஒரு பகுதியாக இருப்பது நமது தந்தையின் அருளுக்கு நம் மனதை முழுமையாகத் திறந்திருப்பதன் பலன்களில் ஒன்றாகும்.

மேலறையில் பயத்துடன் பதுங்கியிருக்கும் சீடர்களின் நிலையில் நம்மை நாமே வைத்துப் பார்த்தால், இன்றைய வாழ்வில் நாம் எதிர்கொள்ளும் சில தற்போதைய சூழ்நிலைகளுக்கான இணைகளை நாம் அறியலாம் ~ வேலை இழக்கும் பயம், தேர்வு எழுதுவதற்கானக் கவலை, கொடிய நோயைப் பற்றிய திகில். பயத்திலும் கவலையிலும் கவலையின் விரக்தியிலும் வாழ்வோர் பலர். இயேசு சீடர்களுக்குத் தோன்றியபோது, எல்லா பயத்தையும் கவலையையும் போக்க வந்தார் (1 யோவான் 4:18). 2 தீமோ 1:7ல், ‘கடவுள் நமக்குக் கோழையுள்ளத்தினை அல்ல, வல்லமையும் அன்பும் கட்டுப்பாடும் கொண்ட உள்ளத்தையே வழங்கியுள்ளார்.’ எனவே நாம் கொண்டாடும் இப்பெருவிழாவில், நம்மையும் நம்மைச் சுற்றியுள்ளவர்களையும் உருமாற்றும் வல்லமையால் நாம் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளோம் என நாம் உறுதியாக நம்பலாம். இன்று நாம் அனைவரும் விசுவசித்தால், தூய ஆவியார் நம் ஒவ்வொருவர் மீதும் இறங்குவார். அதற்குத் தேவைப்படுவது, நாம் அனைவரும் மனத்தாழ்ச்சியுடன் நம் இதயத்தைத் திறக்க வேண்டும்.



# சிந்திப்போம்:

## பகிர்வுக்கானக் கேள்விகள்

*இப்பகுதி தனிநபர் மற்றும் குழுக்கள் பகிர்வுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதன் பிற்பகுதி அன்பியங்கள், ஆலயப் பணிக்குழுக்கள், குடும்பங்கள் என்றக் குறிப்பிட்டச் சூழலுக்கேற்பக் குழுப் பகிர்வுகளைத் தூண்ட உதவும். அனைவரும் இக்கேள்விகளைச் சிந்தித்துப் பதிலளிக்கத் தகுந்த நேரத்தை அனுமதிக்கவும்.*

## தனிநபர் சிந்தனை & பகிர்வுக்கானக் கேள்விகள்

*கீழுள்ளவற்றைச் சிந்திக்க நேரம் ஒதுக்கவும். நீங்கள் குழுவில் இருந்தால் பகிரவும்.*
*உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதி எது?*
*உங்கள் உள்ளத்தைத் தூண்டியது எது? அதை சற்று சிந்தியுங்கள்.*

- உயிர்ப்புக் கொண்டாட்டத்தின் நிறைவை நெருங்கும் நாம் தூய ஆவியாரால் வழிநடத்தப்படத் தயாரா?
- தூய ஆவியார் கொடைகளுடன் வந்தார். அந்தக் கொடைகளில் எது இன்று உங்களில் வாழ்கிறது?

## குழுச் சூழலுக்கு ஏற்றப் பகிர்வுக்கானக் கேள்விகள்

*உங்கள் சூழலுக்கு ஏற்ப பின்வரும் கேள்விகளில் ஒன்றை நீங்கள் சிந்திக்க விரும்பலாம்.*

### அன்பியங்கள்:

*உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிப் பகிருங்கள்.*
*நீங்கள் வாசிக்கக் கேட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிப் பகிருங்கள்.*

- தூய ஆவியாரின் தூண்டுதலுக்கு உங்கள் சமூகம் திறந்த மனதுடன் இருக்கிறதா? உங்கள் சமூகம் இதை எப்படிச் செய்தது?
- இந்த அமர்வில் தூய ஆவியார் உங்கள் சமூகத்திற்கு என்ன சொல்கிறார்?

### ஆலயப் பணிக்குழுக்கள்:

*உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிப் பகிருங்கள்.*
*நீங்கள் வாசிக்கக் கேட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிப் பகிருங்கள்.*

- உங்கள் பணிக்குழுவை வழிநடத்த தூய ஆவியாரை அது அனுமதிக்கிறதா? எவ்வாறு? நாம் தூய ஆவியாரின் பணிகளைச் செய்யவில்லை என்றால், உங்கள் பணிக்குழு என்ன செய்கிறது?
- தூய ஆவியாரின் வழிநடத்துதலைப் பகுத்தறிவது பற்றி உங்கள் பணிக்குழுவிற்குத் தெரியுமா?

**குடும்பங்கள்:**

*உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியை குடும்பத்தாருடன் பகிருங்கள். நீங்கள் வாசிக்கக் கேட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிப் பகிருங்கள்.*

- குடும்ப வாழ்வில் தூய ஆவியாரின் வழிநடத்துதலைப் பகுத்தறிய நீங்கள் குடும்பமாக நேரத்தைச் செலவிடுகிறீர்களா?
- தூய ஆவியாரின் வழிநடத்துதலை உங்கள் குடும்பம் எவ்வாறு சிறப்பாகப் பயன் படுத்த முடியும்?

## நம் வாழ்விற்காக:

*உறுதியான செயல்களால் பதிலளிக்க இறைவார்த்தை எவ்வாறு நம்மைக் குழுவாகவோ அல்லது தனித்தனியாகவோ அழைக்கிறது என்பதைக் கண்டறியவும்.*

ஆண்டவருடைய வாக்குறுதியை நம்முள் அனுபவிக்க, நாம் உயிர்ப்பின் மகிழ்ச்சியோடும் அமைதியோடும் நம்பிக்கையோடும் வாழ வேண்டும்.

## நற்செயல் புரிவோம்:

*வேறு ஒரு நபருக்கு இயேசுவின் நற்செய்தியைப் பகிரவும் அறிவிக்கவும் நீங்கள் செய்ய வேண்டிய செயல்.*

கடந்த வாரங்களாக உங்கள் தொடர்பில் இருந்த அந்த நபரைத் திருப்பலிக் கொண்டாட்டத்திற்கு அழைத்து, உங்கள் சமூக உறுப்பினர்கள் சிலருக்கு அவரை அறிமுகப்படுத்தவும்.

## நிறைவு செபம்:

*நிறைவு செபத்தை அனைவரும் இணைந்து சொல்லி இந்த அமர்வை முடிக்கவும். பங்கேற்ற அனைவருக்காகவும் சமூகத்திற்காகவும் செபியுங்கள்.*

விண்ணகத் தகப்பனே, உமது அருட்கொடையிலுள்ள எதிர்நோக்கின் செய்தி மிகவும் தெளிவானது வல்லமை மிக்கது. தூய ஆவியாரை எங்களுக்கு அனுப்பியதால் எங்கள் மீது நீர் கொண்ட அக்கறையை வெளிப்படுத்தியுள்ளீர். தூய ஆவியாரின் இந்த வரங்களை ஏற்று, அவருடைய வழிநடத்துதலால் கிடைக்கும் ஊக்கத்தை நாங்கள் செயல்படுத்த உதவியருளும். எங்கள் வாழ்வையும், எங்களைச் சுற்றியுள்ளவர்களையும் மாற்றக் கூடிய அவருடைய வல்லமையால் நாங்கள் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறோம். உமது அன்புக்கு நன்றி செலுத்தும் வகையில், எல்லாரும் தூய ஆவியாரால் நிரப்பப்பட்டு, உமது வழிகளில் நடப்பதற்கு இந்தக் கொடைகள் அவர்களைச் சென்றடைய விரும்புகிறோம். எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம். ஆமென்.



# என் பாஸ்கா காலச் சிந்தனைக் குறிப்புகள்

*கடந்த வாரங்களாக*
*உங்கள் தொடர்பில் இருந்த*
*அந்த நபரைத் திருப்பலிக்*
*கொண்டாட்டத்திற்கு*
*அழைத்து, உங்கள் சமூக*
*உறுப்பினர்கள் சிலருக்கு*
*அவரை அறிமுகப்படுத்தவும்.*



# நாங்கள் எதை இன்னும் சிறப்பாகச் செய்திருக்கலாம்?

இந்தக் கையேட்டைப் பயன்படுத்தியமைக்கு நன்றி! நீங்களும் உங்கள் சமூகமும் இறை நம்பிக்கையில் வளர இச்சிந்தனைகள் உதவியிருக்கும் என நம்புகிறோம். இந்தக் கையேடு உங்கள் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்ததா? எதிர்காலக் கையேடுகளில் வேறு என்னென்ன எதிர்பார்கிறீர்கள்? உங்கள் கருத்து எங்களுக்கு முக்கியமானது. அதை எங்களுக்குத் தெரிவியுங்கள்!

**“...ஞானமுள்ளோர் இவற்றைக் கேட்டு அறிவில் இன்னும் தேர்ச்சியடைவர்; விவேகிகள் அறிவுரை கூறும் திறமை பெறுவர்...”**

**நீதிமொழிகள் 1:5**

Scan me

**one.org.sg/feedback**

# பாஸ்கா கால நடவடிக்கைகள்

## பாஸ்கா கால ஞாயிறுகளைக் கொண்டாடுவோம்

### ஆண்டவரின் உயிர்ப்புப் பெருவிழா (9 ஏப்ரல் 2023)

உங்கள் குடும்பத்தாரோடும் நண்பர்களோடும் பாஸ்கா திருவிழிப்புத் திருப்பலியில் கிறிஸ்துவின் ஒரே உடலாகப் பங்கேற்று உயிர்ப்புப் பெருவிழாவைக் கொண்டாடுங்கள்.

### 2ம் பாஸ்கா கால ஞாயிறு
### இறை இரக்க ஞாயிறு (16 ஏப்ரல் 2023)

நீங்கள் குடும்பமாக, பணிக்குழுவாக, சமூகமாக இணைந்து, இறை இரக்கச் செபமாலை சொல்லி, அவருடைய இரக்கம் யாருக்கு அதிகத் தேவையோ அவர்களுக்காகச் சிறப்பாக மன்றாடுங்கள்.

### 3ம் பாஸ்கா கால ஞாயிறு (23 ஏப்ரல் 2023)

திருத்தந்தை அல்லது சிங்கப்பூர் கர்தினால் வெளியிட்டுள்ள நோன்புப் பெருநாள் செய்தியை வாசியுங்கள். இந்த நேரத்தில், உலகளாவிய ஒற்றுமைக்காகவும் பரஸ்பர மதிப்புக்காகவும் திரு அவையோடு இணைந்து மன்றாடுங்கள்.

### 4ம் பாஸ்கா கால ஞாயிறு (30 ஏப்ரல் 2023)

நாளை உழைப்பாளரானத் தூய புனித யோசேப்பின் திருவிழாவைக் கொண்டாடும் நாம் அவருடையப் பரிந்துரைக்காக மன்றாடுவோம். நமது வாழ்விலுள்ள ஆண்களை மதித்துப் போற்றி, அவர்கள் குடும்ப வாழ்விலும், பணி வாழ்விலும் நமக்கு முன்மாதிரியாக இருக்கச் சிறப்பாக மன்றாடுங்கள்.

### 5ம் பாஸ்கா கால ஞாயிறு
### அன்னையர் தினம் (7 மே 2023)

அன்னை மரியாவுக்குப் பூங்கொத்தைப் பரிசளிப்போம். அன்னையர் அனைவருக்காகவும், அன்னையாக விரும்புவோருக்காகவும் இன்று சிறப்பாக மன்றாடுங்கள்.

### 6ம் பாஸ்கா கால ஞாயிறு (14 மே 2023)

விண்ணேற்றம் முதல் தூய ஆவியார் பெருவிழா வரை (19 மே முதல் 27 மே வரை) தூய ஆவியாருக்காக 9 நாள்களும் நவநாள் செபம் செய்யுங்கள்.

### 7ம் பாஸ்கா கால ஞாயிறு (21 மே 2023)

57வது உலகத் தொடர்பு தினத்திற்கான திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் செய்தியைப் வாசியுங்கள். ஒரு ஒன்றித்துப் பயணிக்கும் திரு அவையாக இருக்கக் கற்றுக் கொள்வதில், பாரபட்சமின்றி, திறந்த இதயத்துடன் மற்றவர்களுக்கு உண்மையாகச் செவிகொடுக்க நமக்கு அருள் புரியும்படி நம் தந்தையாகிய இறைவனிடம் மன்றாடுங்கள்.

## தூய ஆவியார் ஞாயிறு (28 மே 2023)

பெந்தக்கோஸ்தே பெருவிழாவுக்காக ஒரு இசைப் பட்டியலைத் தயாரித்து, இந்த வாரம் முழுவதும் உங்கள் பணியின் பின்னணியில் இசைக்கவும். மாற்றாக, நீங்கள் சிங்கைக் கத்தோலிக்க வானொலியைக் கேட்கலாம். நீங்கள் தூய ஆவியாரின் தூண்டலுக்கு உள்ளாகும் போதெல்லாம் பாடலுடன் இணைந்துப் பாடுங்கள்.

## பாஸ்கா காலக் குடும்ப நடவடிக்கை: விசுவாச நாற்றுகள்

இயேசுவின் பிள்ளைகளாகப் புதுவாழ்வைப் பெற்றதன் நினைவாக, இந்தப் பாஸ்கா காலக் குடும்ப நடவடிக்கையைப் பயன்படுத்தி, இந்த வசந்தக் காலத்தில் ஒரு விதையை முளைக்கச் செய்யுங்கள்.

### தேவையானவை:

- விதைகள்
- நீர் உறிஞ்சும் காகிதங்கள்
- நெகிழிப்பை
- நீர்
- திருவிவிலியம்

### செய்முறை:

1. ஒவ்வொரு குடும்பத்தாரும் நீர் உறிஞ்சும் காகிதம் ஒன்றை நான்காக மடித்துக் கொள்ளவும்.
2. அதன் நடுவில் நான்கு விதைகளை வைத்து, விதைகள் உள்ளக் காகிதத்தை நெகிழிப்பையில் வைத்து கொஞ்சம் நீரைத் தெளிக்கவும்.
3. இந்த நெகிழிப்பையை சூரிய ஒளி படும்படி ஓரிடத்தில் வைக்கவும்.
4. ஒவ்வொரு நாளும் விதைகள் முளைக்கிறதா என வெவ்வேறு குடும்ப உறுப்பினர் கவனித்து வரவும்.
5. விதைகள் முளைத்தப் பின், திருவிவிலியத்திலிருந்து 1 கொரிந்தியர் 3:6-9ல் உள்ள இறை வார்த்தைகளை வாசித்து, உங்கள் குடும்பத்தாரின் நம்பிக்கை வளர்ச்சியும் மேம்பாடுகளும் எவ்வாறு இருக்கிறது என்பதை உங்கள் குடும்பத்தாரின் முளைத்த நாற்றுகளோடும் வாசிக்கப்பட்டப் இறை வார்த்தையோடும் ஒப்பிட்டு உங்கள் கருத்துகளைப் பகிருங்கள்.

# பாஸ்கா கால நடவடிக்கைகள்

## தூய ஆவியார் ஞாயிறு கொண்டாட்டம்: அசைந்தாடும் நெருப்பு நாவுகள்

*(Adapted from William H. Sadlier, Inc.)*

உங்களால் என்ன செய்ய முடியும் என்பதைக் காட்ட, அசைந்தாடி ஒன்றை உருவாக்கி இயேசுவின் நற்செய்தியை உலகிற்கு கொண்டு செல்லுங்கள்.

### தேவையானவை:

- ஆடை தொங்கி அல்லது குச்சி
- நூல்
- சிவப்பு நிற அட்டை
- வண்ண எழுதுகோல்கள்

### செய்முறை:

1. கீழே கொடுக்கப்பட்டுள்ள நெருப்பு நாவுகளை அட்டை அச்சிடுங்கள்.
2. அதை அழகாக வெட்டியெடுத்து, பிறருக்கு நற்செய்தி அறிவிக்கத் தூய ஆவியாரின் கொடைகளை நீங்கள் எவ்வாறு பயன்படுத்துவீர்கள் என்பதை உங்கள் வார்த்தைகளாலோ வேறு அடையாளங்களாலோ அட்டையை அலங்கரியுங்கள்.
3. அட்டையின் மேல் ஒரு ஓட்டையிட்டு அதில் நூலின் ஒரு பகுதியால் முடிச்சு போடுங்கள்.
4. நூல் கட்டிய அட்டையை ஆடை தொங்கியில் அல்லது குச்சியில் கட்டித் தொங்க விடுங்கள்.
5. நீங்கள் செய்த காற்றில் அசைந்தாடும் உங்கள் நெருப்பு நாவுகளைக் கண்டு மகிழுங்கள்.



# நன்றியறிவிப்புகள்

**ஆசிரியர் குழு:**

ஆக்னெஸ் நௌ

கிறிஸ்டோஃபர் தோ

டேஃப்னி லியோங்

டெஸ்மொன்ட் சூன்

எர்வின் சுசான்தோ

ஜெரால்ட் கோங்

இசபெல் ஹோ

ஜேக்குலின் ஃப்ளெட்சர்

ஜேர்விஸ் காங்

சாரா வீ

அருட்தந்தை ஸ்டேன்லி கோ, SJ

அருட்தந்தை டெரென்ஸ் பெரெய்ரா

**மொழிபெயர்ப்பு:**

சீன மொழி பேசுவோருக்கான உயர்மறைமாவட்ட ஆணையம (ACAMS)
தமிழ் மொழி பேசுவோருக்கான உயர்மறைமாவட்ட ஆணையம் (ACTS)

**வடிவமைப்பு:**

மேபிள் ஹியூ

ONE
OFFICE FOR THE NEW EVANGELISATION

2 Highland Road #02-19 S(549102)

6911 0420

one.org.sg

enquiries.one@catholic.org.sg

@officeforthenewevangelisation

Office for the New Evangelisation

@evangelise.sg